Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 03 ஞாயிற்றுக்கிழமை (15.02.2015) பக்கங்கள் 20 ஓசை – 138

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

### அன்பு சால் வாசகர்களே...

தினமுரசு நாளிதழ் இன்றுமுதல் 20 ரூபாவாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 2010ஆம் ஆண்டு தொடக்கம் நேற்றுவரை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பத்து ரூபாவாக விற்பனை செயயப்பட்ட தினமுரசு நாளிதழ் இன்றுமுதல் விலை அதிகரிப்பை மேற்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளது.

எனவே இதுநாள்வரை வாசகர்களாகிய நீங்கள் தந்த ஆதரவை தொடர்ந்தும் .தருவீர்களென்ற நம்பிக்கையுடன்...

## அமைச்சுப் பதவியிலிருந்து விலகினார் விஜேசிங்க?

உயர் கல்விஇராஜாங்க அமைச்சர் ரஜீவ விஜேசிங்க தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து அவர் அமைச்சரவை அந்தஸ்துள்ள உயர் கல்வி அமைச்சர் கபீர் ஹசீமுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர் ஷனிகா

19 ஆம் பக்கம் பார்க்க

- ஐ.நா. விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கக்கோரி -

## யாழ். பல்கலைக்கழக சமூகம் மாபெரும் பேரணிக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை அறிக்கை எதிர்வரும் மார்ச்மாதம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவேண்டுமென வலியுறுத்தி எதிர்வரும் 24ஆம் திகதி மாபெரும் பேரணியொன்றை யாழ். பல்கலைக்கழக சமூகம் நடாத்தவுள்ளதாக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அ.இராஜகுமாரன் தெரிவித்துள்ளார்.



யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் உட்பட ஊழியர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.இந்த மாபெரும் பேரணியின் போது, விசாரணை அறிக்கையினை சமர்ப்பிக்க வலியுறுத்தி

19 ஆம் பக்கம் பார்க்க

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த அவகாசத்தை தாருங்கள்

## புலம்பெயர் தமிழ் சமூகத்தை கேட்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)


இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் தமது அரசாங்கத்திற்கு குறிப்பிட்டளவு காலஅவகாசத்தை வழங்க முன்வரவேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பணியாற்றும் வெளிநாட்டுத்தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளை ஜனாதிபதி மைத்திரிபால நேற்று முன்தினம். சந்தித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எமது மக்களிடையே நல்லிணக்கம் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் வழிகள் குறித்து அரசாங்கம் உணர்ந்துள்ளது. எனி

19 ஆம் பக்கம் பார்க்க



## ஐ.நா.வின் விசாரணை அறிக்கை மார்ச்சில் வெளிவர வேண்டும்



### சம்பந்தன் தெரிவிப்பு

போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடரபாக ஐ.நா.வின் மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணையின் அறிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு அடுத்த மாத இறுதியில் வெளியிடப்படவேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அந்த விசாரணை தற்போது முடிவடைந்திருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழரின் அபிலாஷைகளை புதிய அரசு பூர்த்தி செய்யாது

### சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

(பருத்தித்துறை)

வடமாகாணத்தில் இராணுவ பிரசன்னம் குறைக்கப்படும் என புதிய அரசினால் முன்னர் தெரிவிக்கப்பட்ட போதிலும் அது சாத்தியமற்ற நிலையில் இந்த அரசும் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் என நம்ப முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்றையதினம் நாகர்கோயில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு மாண

19 ஆம் பக்கம் பார்க்க

## ஈ.பி.டி.பி. மீதான குற்றச்சாட்டுக்கள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை

(கோப்பாய்)

அரசியல் உள்நோக்கம் கருதியே உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்கள் ஈ.பி.டி.பி மீது முன்வைக்கப்பட்டு வருவதாகவும், எனவே தமிழ் ஊடகங்கள் மாற்றுக்கருத்துக்களுக்கும் இடம் கொடுக்க வேண்டுமென அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க



## சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பதவிகளில் அதிரடி மாற்றங்கள்

### தேசிய அமைப்பாளராக சுசில்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக முன்னாள் அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முன்னர், பசில் ராஜபக்சவே தேசிய அமைப்பாளராகப் பதவி வகித்து வந்தார்.

கட்சியின் பொதுச்செயலராக அனுர பிரியதர்சன யாப்பா தொடர்ந்தும் நீடிப்பார். பொருளாளராக, எஸ்.பி.நாவின்னவை நியமிப்பதென்றும் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

அதேவேளை, நேற்று நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில்,

10 ஆம் பக்கம் பார்க்க

# சிறுத்தீவு அன்னையின் திருநாள் இன்று

(யாழ்ப்பாணம்)

யாத்திரைத் தலமான யாழ்.சிறுத்தீவு அர்ச்.லூர்து அன்னை ஹெவித்திருநாள் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பிக்கும் திருநாள் வழிபாடுகள் குருநகர் யாக்கப்பர் ஆலய பங்குத்தந்தை வண.றோமான் நேசராசா அடிகளாரால் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலிப் பூசையைத் தொடர்ந்து அன்னையின் சொரூபத்தால் ஆசிர்வதித் தலுடன் நிறைவுபெறும்.

குருநகர் இறங்குதுறையில் இருந்து பிற்பகல் 2 மணி தொடக்கம் சிறுத்தீவுக்கான படகுப் போக்குவரவுகள் இலவசமாக நடாத்தவுள்ளதாகவும் தீவில் கடந்த 2014 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பாலத்தில் யாத்திரிகர் அழைத்துச் சென்று இறக்கப்படுவதுடன் திருநாள் கொண்டாட்டங்களின் முடிவில் திரும்பவும் குருநகர் இறங்குதுறைக்கு அழைத்து வரப்படுவரென்றும் அறிவிக்கப்படுகிறது.

இளைப்பாறல் மற்றும் தாக நிவர்த்திகளுக்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (68)

# போதனாசிரியர்கள் பற்றாக்குறையால் திட்டங்கள்,சேவைகளில் பாதிப்பு

## கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப்பணிப்பாளர் தெரிவிப்பு

வடமாகாணத்தில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் பல்வேறு திட்டங்களை நிவர்த்தி செய்ய முடியாமல் இருப்பதாக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் எஸ்.வசீகரன், தெரிவித்தார்.

கால்நடை அபிவிருத்தி போதனாசியர்களால் மேற்கொள்ளப்படும் முக்கியமான வேலை, செயற்கைமுறை சினைப்படுத்தல் ஆகும்.

போதனாசிரியர் களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் தனியார் நிறுவனங்களுக்கு செயற்கைமுறைசினைப் படுத்தல் பயிற்சியை வழங்கி அவர்களை எமது வேலைத்திட்டத்தில் இணைத்துள்ளோம். இவர்களுக்கு பண்ணையாளர்கள் கொடுப்பனவை வழங்கவேண்டும்.

அரசாங்கத்தினூடாக சினைப்படுத்தலுக்கு 50 ரூபாய் மட்டுமே செலவாகும். ஆனால் தனியார் ஊடாக செய்யும் போது 250 ரூபாய் தேவைப்படுகின்றது.

இப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டால் எமது திணைக்களத்தின் ஊடாகவே இதனைச் செய்ய முடியும். இந்த போதானாசிரியர்கள் இரண்டு வருட கால்நடைத்துறை டிப்ளோமா கற்கை நெறியை நிறைவு செய்திருக்க வேண்டும்.

ஆனால் தற்போது அந்த கற்கைநெறி பூர்த்தி செய்தவர்கள் இல்லாத காரணத்தால் க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்தில் 3 பாட சித்தியடைந்தவர்களை உள்வாங்குகின்றோம்.

அவர்களுக்கு தற்காலிக நியமனங்கள் வழங்கி, அதற்குரிய சம்பளமும் வழங்கப் படுவதுடன், 2 வருட டிப்ளோமா கற்கை நெறிக்கும குண்டக சாலைக்கு அனுப்புகின்றோம்.

இரண்டு வருட கற்கை நெறியை நிறைவு செய்தவுடன் நிரந்தர நியமனம் வழங்கப்படுகின்றது. தற்போது 120 போதனாசிரியர்கள் தேவைப்படும் இடத்தில் 60 பேர் மாத்திரம் உள்ளார்கள். வவுனியா மாவட்டத்தில் டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிப்பதற்கு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அவர்களின் ஒப்புதலுடன் வடமாகாணத்தில் இந்த கற்கை நெறியை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம். கடந்த காலங்களில் நிலவி வந்த கால்நடை வைத்தியர் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் 34 வைத்திய நிலையங்கள் அமைந்துள்ளன.

இவற்றுக்கு 78 வைத்தியர்கள் தேவைப்படும் நிலையில் 43 வைத்தியர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யுமிடத்து எமது திட்டங்களையும் சேவைகளையும் மேலும் சிறப்பாகச் செய்ய முடியும் என அவர் மேலும் கூறினார்.



புனரமைக்கப்பட்ட யாழ்.குருநகர் தூய கார்மேல் அன்னையின் ஆலயம் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் நேற்று திறந்துவைக்கப்பட்டு திருப்பலி இடம் பெறுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (27)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | ஞாயிற்றுக்கிழமை |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா (R) |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் (R) |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | சிறப்பு திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் (R) |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08:20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 334 |
| திகதி - | 2015.02.13 |
| வர்ணம் - | நீலம் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

05 23 27 44 L

பரிசுத் தொகை ரூபா. 23,041,900/- வெல்லப்படவில்லை

| | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 09 | 450,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 209 | 209,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 375 | 375,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9296 | 557,760/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4994 | 199,760/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 122076 | 2,441,520/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17913 | 358,260/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 23,041,900/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,591,300/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 23,280,940/-

2015.02.17ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.

தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk

(C/3818)


# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு அதிகரித்த கொடுப்பனவு

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு உள்ளூராட்சி சபைத் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி தவிசாளருக்கு 25 ஆயிரம் ரூபாவும் உதவித் தவிசாளர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும் கொடுப்பனவாகக் கொடுக்கப்படுகிறது. இதற்கு முன்னர் தவிசாளர் 10 ஆயிரம் ரூபாவும் உதவித் தவிசாளர் 7500 ரூபாவும் உறுப்பினர்கள் 5 000 ரூபாவை மட்டுமே பெற்று வந்தனர் தற்போது பிரதேச உறுப்பினர்களாக இருப்பவர்களில் சிலர் ஓய்வூதியம் பெற்றுக் கொள்பவர்களாக இருக்கும் அதேநேரம் சிலர் அரச உத்தியோகத்தர்களாகவும் இருக்கின்றார்கள்.

சபை உறுப்பினர்களுக்கு அதிகரித்த கொடுப்பனவு கிடைக்கப்பெறுவதனால் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் பலர் போட்டியிடுவதற்குத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது (137)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வாடகைக்கு வீடுகள்/கட்டடங்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய 1500 சதுர அடிகளுக்கு மேற்பட்ட பெரிய நடுத்தர வீடு கள்/கட்டடங்கள் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகு திகளில் வாடகைகக்கு தேவை.

வீட்டை/கட்டடத்தை வாடகைக்கு தர விரும்புவோர் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/நிர்வாகம் அவர்களுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 27.02.2015 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் தனித்தனியாக கடித உறையின் இடது மேல் மூலையில் "மணவர்களின் விடுதிக்கான வீடு/கட்டடம் என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்

(C/3823)


## கால்கோள் விழா

தெண்புலோலி புற்றளை சித்தி விநாயகர் முன்பள்ளியின் கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் புற்றளை சனசமூக நிலையத் தலைவர் எஸ். வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கால் கோள் விழாவில் புலோலி கிழக்கு கிராம அலுவலர் ரீ.அரவிந்தராம பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். பரிசில் வழங்கலையடுத்து கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (01)

# உணவுப் பொருட்களின் விலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை

## விசனமடையும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

ஊடகங்களில் மட்டுமே உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட சில கடைகளில் அவ்வாறு இல்லை எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பை அடுத்து தேனீர்கடை, மற்றும் குளிர்பான வகைகளின் விலைகள் குறைவடையும் என எதிர்பார்த்திருந்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்துள்ளதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தேநீர் கடைகளில் விற்கப்படும் பொருட்கள், மற்றும் குளிர்பான வகைகளின் விலைகள் குறைக்கப்படாமல் பழைய விலைகளுக்கே விற்பனை செய்யப்படுவதாகவும் இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்கள் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதுமட்டுமன்றி ஒரு சில தேநீர் கடைகளில் சில உணவுகளின் விலைகள் குறைத்து விற்கப்படுகின்ற போதிலும் அந்த உணவுப்பொருட்களின் அளவும் குறைவடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சீரடி சாயி மந்திர் மகாசிவராத்திரி விழாவும் பாபா வீதி உலாவும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் சிவராத்திரி பூசைகள் மாலை 05 மணிக்கு ஸ்ரீ நவசக்தி கணபதி அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். நான்கு சாமங்களும் விசேட அபிஷேகம், அலங்காரம், பூசை என்பன சிறப்பாக நடைபெறும்.

நள்ளிரவு 12 மணிக்கு (லிங்கோற்பவகாலம்) பக்தர்கள் தமது கரங்களாலேயே பாபாவுக்கும், லிங்கத்திற்கும் 1008 குடம் நீர் அபிஷேகம் செய்ய முடியும் இரவு 8 மணிக்கு பாபாவின் வீதி உலா ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும். வீதி உலா நாவலர் வீதி கைலாயபிள்ளையார் வீதி, கோவில் வீதி, செட்டித்தெரு ஒழுங்கை, செட்டித்தெரு பருத்தித்துறை வீதி, நல்லூர் குறுக்குவீதி, நாவலர் வீதி ஊடாக மீண்டும் ஆலயத்தை வந்தடையும் என்றும் சீரடிசாயி மந்திர் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். (01)

# விக்கிரகக பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

நல்லூர் சீரடி சாயிமந்திரில் ஸ்ரீஸர்வமங்கள சாயிபாபா சுவாமி நூதன விக்கிரக பிரதிஷ்டா அஷ்டபந்தன ஏககுண்ட பட்ஷ மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.31 மணிக்கு நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிஷேக கிரியைகள் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை பக்த அடியார்களின் பால்காப்பு இடம்பெறும்.

அன்றையதினம் பாற்குட பவனியும் இடம்பெறவுள்ளது. மகாகும்பாபிஷேகத்தையடுத்து மகாஅபிஷேகமும் அன்னதானமும் இடம்பெறும். 108 நாட்கள் தொடர்ந்து மாலை 4 மணிக்கு சீரடி சாயி பாபாவுக்கு விசேடஅபிஷேகம் நடைபெறுமென்றும் சீரடிசாயி மந்திர நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர் (01)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத்தெரிவுக்கான பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்குச் சங்கப்பணிமனையில் ஆர்.பூரணைச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பலநோக்குக் கூட்டுறவுச்சங்க 13 கிளைக்குழுக்களுக்குமான கிளைக்குழு உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இக்கிளைக்குழுத்தலைவர் தெரிவுகளும் இடம்பெற்றிருந்தன.

இன்றைய இயக்குநர்சபை உறுப்பினர் தெரிவுக்கான பொதுக்கூட்டத்தில் எஸ்.கணேசலிங்கம் தலைமையிலான குழுவும், எஸ்.வல்லிபுரநாதன் தலைமையிலான குழுவும் போட்டியிடுகின்றன.

07 பேர் இயக்குநர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர். (01)

# உள்ளூராட்சி ஆணையாளருக்கு கொலை அச்சுறுத்தல்

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.ஜெகூவுக்கு உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகத்தில் பணியாற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி முகாமைத்துவ உதவியாளர், கடந்த 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி வரையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் கடமையாற்றியிருந்தார்.

இக்காலப்பகுதியில், இடம்பெற்ற சட்டவிரோத மணல் விற்பனை, உழவு இயந்திர கொள்வனவு மோசடி, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி மோசடி என 11 குற்றச்சாட்டுக்கள் இவருக்கு எதிராக சுமத்தப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. விசாரணை காலத்தின் போது இவர் கடமைக்கு செல்வதை தவிர்த்து வந்ததால் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.

தொடர்ந்து 2013 ஆம் ஆண்டில் மாகாண பொதுச் சேவை ஆணையாளரினால், உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகத்தில் இவர் பணிக்கு அமர்த்தப்பட்டார். இத்தருணத்தில் அவர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், அது தொடர்பான ஆரம்ப புலன் விசாரணை அறிக்கை மற்றும் குற்றச்சாட்டு பத்திரம் ஆகியவற்றை ஒழுக்காற்று அதிகாரிக்கு அனுப்பியிருந்தது.

இந்த அறிக்கை அனுப்பப்பட்டதை அடுத்தே, குறித்த முகாமைத்துவ உதவியாளரினால் ஆணையாளருக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. "வீடு புகுந்து அடிப்பேன்" என்றும் "கொலை செய்வேன்" என்றும் அவர் தனக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக ஆணையாளர், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பில் வடமாகாண ஆளுநர் எச்.என்.ஜி.எஸ்.பளிஹக்கார, வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு தலைவர், மாகாண பிரதம செயலாளர் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் ஜெகூ தெரியப்படுத்தியுள்ளார்.

# மீண்டும் அடி சறுக்குகிறது தமிழரின் கனவு அரசியல்




இலங்கையின் போர்க்குற்றங்களைப் பற்றிய விசாரணைகள் நீர்த்துப் போய்விட்டன. இனி அது ஒரு சூடாறிய கஞ்சிதான்.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக புதிய நீதிப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு கால அவகாசம் அளிக்கும் வகையில், ஐ.நாவின் விசாரணை அறிக்கை வெளியிடப்படுவது தாமதிக்கப்படும் என்று சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அமெரிக்காவுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தில் வொஷிங்டனில் 12.02.2015 அன்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியை சந்தித்த பின்னர், அவர் இப்படிக் கூறியிருக்கிறார்.

உள்நாட்டில் பொறுப்புக்கூறும் பொறிமுறைக்குச் சமாந்தரமாக, உண்மை கண்டறியும் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பாக அடுத்த வாரம் தென்னாபிரிக்காவுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவிருக்கிறோம்." என்றும் மங்கள சமரவீர சொல்லியிருக்கிறார்.

இதொன்றும் புதிய விடயம் அல்ல.

போர்க்குற்றச்சாட்டுகளைக் கையில் எடுத்ததே அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் தான். போர்க்குற்ற ஆதாரங்களைச் சேகரித்து, அதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தியதும் மேற்குத்தான். இலங்கையைத் தமது பிடிக்குள் கொண்டு வருவதற்காக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் சீனசார்பு நிலையைத் தடுப்பதற்காக அல்லது துண்டிப்பதற்காக மேற்கு இந்த உபாயத்தைக் கைக்கொண்டது.

இந்த மாதிரியான அணுகுமுறையை மேற்குலகம் பல இடங்களிலும் செய்து வருகிறது. மிகச் சாதாரணமான அரசியல் அனுபவத்தை உடையவர்களே இதை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

இதைப்பற்றி மிகச் சுருக்கமாக குணா கவியழகன் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் எழுதிய குறிப்பைப் பாருங்கள்.

**"சீனாவின் செல்வாக்கிற்குள் விழுங்கப்பட்டுவரும் இலங்கையை விடுவிக்க மேற்குலகிற்கு மகிந்த ஆட்சியை விலக்க வேண்டியிருக்கிறது. மகிந்தவின் அரசியலை தோல்வியாக்க அவை கைக்கொண்ட கருவியே போர்க்குற்றம். ஆனால் எதிர்த்தரப்பு (மாற்றத்துக்கான அணி) முன்னெடுக்கும் இனக்குரோத அரசியல் மற்றும் போர்குற்றம் புரிந்தவர்களை பாதுகாப்பது என்பதற்கு மேற்கின் முழு ஆசியும் உண்டு.**

**காரணம் மேற்குலகின் தேவை அரசியல் மாற்றமே அன்றி அரசியல் நீதியல்ல.**

**எதிர்த் தரப்பு வெற்றி பெற்றால் என்ன நடக்கும்?**

**அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற வாய்ப்பு கிட்டும். சு.க. இரு சில்லுகளாக உடையும். பலமான எதிரணி இருக்காது. இது மேற்குலகிற்கு கொண்டாட்டமாக இருக்கும்.**

**போர்குற்றம் இராணுவ அத்துமீறல்களாக (படையினரின் தனிப்பட்ட ஒழுக்க மீறலாக) தரமிறக்கி விசாரிக்கப்படும்.**

**உள்நாட்டு விசாரணைக்கு உலகின் வாழ்த்தும் அங்கீகாரமும் கிட்டும். விசாரணை தீர்ப்புகள் இன்றி நீர்த்துபோகும் வரை இழுபடும். அவ்வளவே இவற்றிற்கு வாய்ப்புண்டு.**

**அவர்களிடம் அடுத்து என்ன என்ற அரசியல் நிகழ்ச்சி நிரல் உண்டு. எங்களிடம் (தமிழர்களிடம்) உண்டா?**

**ரணில் - மைத்திரி கூட்டிற்கு வாக்களித்தோமா? அவர்களின் நிகழ்ச்சி நிரல்படி வாக்களிக்க வைக்கப்பட்டோமா ?**

**எது பொருள் உள்ள உண்மை, என் சனமே?**

'தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அரசியல் எப்பொழுதும் அடி சறுக்கும் அரசியல்தான்' என்பது மீண்டும் வெளிப்படையாகியுள்ளது. இது தனியே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கான அடி சறுக்கல் மட்டுமல்ல, 'கூட்டமைப்பைப் போலச் சிந்திக்கும் தமிழ்த்தேசியவாதிகள்' அனைவருக்குமான அடிசறுக்கலே.

ஆனால், இதை அவர்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். இந்தப் பின்னடைவுகளில் இருந்து பாடங்களைப் படிக்கவும் மாட்டார்கள்.

எப்போதும் யதார்த்தமாக, உண்மையாகச் சிந்திப்பதற்குப் பதிலாக கற்பனையாகவும் மிகையாகவும் தவறாகவும் சிந்திப்பதே பெரும்பாலான தமிழர்களின் வழமையாக உள்ளது.

இதனால்தான் எப்பொழுதுமே தவறான அரசியல் தெரிவுகள் நடக்கின்றன.

வெளித்தோற்றத்தில் தாம் ஒவ்வொரு தடவையும் வெற்றியடைவதைப்போல உணர்ந்தாலும் யதார்த்தத்தில் - உண்மையாகவே தமிழர்கள் தொடர்ந்து தோற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தோல்விகளுக்கெல்லாம் காரணம், தமிழர்களின் தவறான அரசியல் தெரிவும் கற்பனையான எண்ணங்களுமே.

வெளியாருக்காக காத்திருக்கும் ஏமாளித்தனத்துக்கு இன்னொரு செருப்படி இது.

முன்னர் இந்தியாவை நம்பிய தமிழர்கள் இப்பொழுது அமெரிக்காவை நம்புகிறார்கள். தங்களையோ அயலில் இருக்கின்ற பிற சமூகங்களையோ அவர்கள் நம்பத் தயாராக இல்லை என்பதுதான் அவலம்.

**தூரத்துத் தண்ணி ஆபத்துக்கு உதவாது - முதுமொழி**

புகழ்தான் நம்மைத் தேடிவர வேண்டும் நாம் அதைத் தேடிப் போகக்கூடாது. - எம்.ஜி.ஆர்.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இளைஞர்கள் சிந்திக்க வேண்டும்!

ஏற்கனவே யாழ்ப்பாண மக்கள் மோசமான குடிநீர்ப் பிரச்சினையை எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், சுன்னாகம் கழிவு ஒயில் பாதிப்பானது, இப்போதே அந்தப் பிரச்சினையை பூதாகரமாக உணர வைத்துள்ளது.

தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற பிரதிநிதிகளாகவும், மாகாணத்தில் நேரடியாகவும் மத்தியில் மறைமுகமாகவும் தாங்கள் அமைத்த அரசே நடைபெறுவதாகவும் சொல்லிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் "ஐயையோ நீர் மாசாகிறதே..." என்று தாங்களும் ஒருபாட்டம் அழுதுவிட்டுத் தங்கள் சொந்த அலுவல்களைக் கவனிக்கப் போய்விட்டார்கள்.

தமிழ் மக்களுக்கான ஆட்சிப் பொறுப்பைத் தங்களுக்கே கேட்கத் தெரிந்த கூட்டமைப்பினருக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தெரியவில்லை. கொடிபிடித்து நின்று யாரையோ நோக்கி இரண்டுமுறை கூப்பாடு போட்டுவிட்டு, அடுத்த தேர்தலுக்கு வேண்டிய அடிமானங்களைப் போடச் சென்றுவிட்டனர்.

சுன்னாகம் நிலத்து நீர்ப் பிரச்சினைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் ஒன்றும் செய்ய இயலவில்லை என்கின்ற ஆதங்க மேலீட்டால் இன்னுமொரு இளைஞர் குழாம் அதற்கான பொதுப் போராட்டங்களைத் தாமாகவே முன்னெடுத்து வருகின்றனர்.

மக்களின் பிரச்சினைகள் குறித்த எந்த ஆய்வுகளும் திட்டமிடல்களும் தீர்வுகளும் இவர்களிடமில்லை. தேர்தல் வெற்றிகளுக்கு வேண்டிய உசுப்பேத்தல் பேச்சுகளை மட்டுமே தங்களிடம் வண்டி வண்டியாக வைத்திருக்கிறார்கள். வேறொரு புண்ணாக்குமில்லை.

யாழ்ப்பாணத்தில் நீர்வளமும் நிலவளமும் போதாது என்ற காரணத்தால்தான் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே மக்களை வன்னிக்கு கொஞ்சம் கொஞ்சமாக இடம்பெயரச் செய்வதற்கான முயற்சிகளும் ஊக்குவிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதையும் நடைபெற விடாத யாழ்மையவாத அரசியலையே இவர்களும் இவர்களுக்கு வக்காலத்து வாங்கும் பிரமுகர்களும் செய்துவருகிறார்கள். பல்கலைக் கழகங்கள் பாடசாலைகள் ஆஸ்பத்திரிகள் எல்லாம் தங்கள் அடிவளவுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று கருதிச் செயற்பட்டு சுத்திச் சுத்திச் சுப்பர் கொல்லைக்குள்ளேயே இருந்துகொண்டார்கள்.

மாகாண சபையை கூட வன்னிக்குச் செல்லவிடாமல், அதன் அமைச்சுக்களும் அலுவலகங்களும் இங்கேயே கொண்டுவந்தார்கள். இந்த நிலம் எவ்வளவு மக்களைத்தான் தாங்கும் என்று எந்த முன்யோசனையும் வேண்டாமா?

யாழ்ப்பாணம் குடிநீருக்குத் தவிக்கும் காலம் விரைவில் வரும் என்று தெரிந்தும் இரணைமடுக்குளத் தண்ணீர் இங்கு வருவதற்கு சொந்த அரசியல் லாபங்களைக் கருதித் தடைகளைப் போட்டார்கள்.

இப்போதும் நிலத்தடி நீர் நஞ்சாவதற்கு என்ன தடுப்புகளைச் செய்யவேண்டும், எத்தகைய தீர்வுகளைக் காணவேண்டும் என்ற எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. மாறாக இனப்படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றி அரசாங்கத்தைப் பகைநிலையில் வைத்துக்கொள்வதுதான் அவர்களுக்கு இப்போது முக்கியமாகத் தெரிகிறது.

மக்களது உணர்ச்சிகளை அவ்வப்போது சூடேற்றி வைத்துக்கொள்வதன் மூலம் அவர்களது அன்றாடப் பிரச்சினைகளுக்கு வரும் ஆபத்துக்களை மறைத்துச் செல்கிறார்கள். எங்கள் பிரதேசத்தை நாசமடைய விட்டு, மக்களின் எதிர்கால வாழ்வை இருளாக்கிவிட்டு, எதிரியைப் பழிதீர்த்த திருப்தியைக் கொண்டாடி என்ன பயன்?

இந்தத் தலைவர்கள் ஒருபோதும் யோசிக்க மாட்டார்கள். மக்கள் குறிப்பாக இளைஞர்கள்தான் விழிப்படைய வேண்டும். நமது நிலத்தை, நீரை, எதிர்கால சந்ததியை பாதுகாக்கும் விவேகத்தை அவர்கள்தான் காட்ட வேண்டும்.

- ஆசிரியர்

# மேரிகமலா ராஜினாமா

## அவரது இடத்துக்கு புதியவர்

(முல்லைத்தீவு)

வடமாகாண சபையின் முல்லைத்தீவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பின் உறுப்பினரான மேரி கமலாவின் இராஜினாமா கடிதம் தேர்தல்கள ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிடமாகும் இவரது இடத்திற்கு வவுனியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நடராசா என்பவர் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தலில் கிடைத்த போனஸ் ஆசனத்தை சுழற்சி முறையில் மாவட்டத்திற்கொரு முறையென பகிர்ந்து கொள்வதென்ற தீர்மானத்தின் அடிப்படையில் முதலில் முல்லைத்தீவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மேரி கமலா நியமிக்கப்பட்டிருந்தார்.

இவரது நியமனக் காலமான ஒரு வருடம் முடிவடைந்ததையடுத்தே வவுனியாவிலிருந்து நடராசா என்பவர் நியமிக்கப்படவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொன்சேகா எம்.பி.ஆகும் வாய்ப்பு ஜயந்த கெட்டகொடவின் கைகளில்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட பதவி விலகினால், அந்தப் பதவி சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்படும் என தேர்தல்கள ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜயந்த கெட்டகொட பதவியை ராஜினாமாச் செய்தால் அந்தப் பதவி வெற்றிடத்தை, சரத் பொன்சேகாவிற்கு வழங்குமாறு நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தல் விடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சரத் பொன்சேகாவிற்கு எதிரான சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அவரை விடுதலை செய்வதாக அறிவித்திருந்தார். இராணுவ நீதிமன்றில் குற்றவாளியாக்கப்பட்ட ஜெனரல் சரத் பொன்சேகா சிறைத்தண்டனையையும் அனுபவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனியார்துறையின் சம்பளத்தை பத்தாயிரமாக உயர்த்த இணக்கம்

இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பிற்கு அமைவாக, தனியார்துறையிலும் ஆகக்குறைந்த அடிப்படை சம்பளத்தை 10,000 ரூபா வரை உயர்த்துவதற்கு தேசிய தொழில ஆலோசனை சபையுடன் புரிந்துணர்விற்கு வந்துள்ளதாக நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தேசிய தொழில் ஆலோசனை சபையுடன் நேற்று முன்தினம் விசேட பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சம்பள நிர்ணய சபைக்குக் கீழுள்ள நிறுவனங்களின் ஊழியர்களது ஆகக்குறைந்த அடிப்படைச் சம்பளத்தை 10,000 ரூபா வரை உயர்த்துவதற்கு இதன் போது புரிந்துணர்வு காணப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலாபம் மற்றும் திறமையின் அடிப்படையில் 15 வீதம் முதல் 35 வீதம் வரை சம்பளத்தை அதிகரிப்பதற்கும் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நிறுவனங்களின் நிர்வாக சபைகளுடன் கலந்துரையாடி அடுத்த சில வாரங்களுக்குள் உடனடி தீர்மானமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு எணணியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

## இராணுவத்தளபதிக்கு விடைபெறும் நேரம்; சேவைநீடிப்புக்கு வாய்ப்பு இல்லை

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயாரட்நாயக்க அடுத்த வாரம் ஓய்வு பெற்றுக் கொள்ள உள்ளார். முன்னாள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் சேவை நீடிப்பின் அடிப்படையில் தயாரட்நாயக்க இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு எதிரான விசாரணைகளின் போது முக்கிய சாட்சிகளில் ஒருவராக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அண்மையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இராணுவ சூழ்ச்சித் திட்டத்துடனும் தயாரட்நாயக்கவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஓராண்டு கால சேவை நீடிப்பின் அடிப்படையில் இராணுவத் தளபதியாக கடமையாற்றி வந்த தயா ரட்நாயக்கவின் பதவி, மேலும் நீடிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனடிப்படையில், அடுத்த வாரமளவில் புதியதொரு இராணுவத் தளபதி நியமிக்கப்படவுள்ளார்.

ரஷ்யாவிற்கான இலங்கைத் துணைத் தூதுவர் மேஜர் ஜெனரல் கிருஸாந்த டி சில்வா உள்ளிட்ட சில சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் இராணுவத் தளபதி பதவிக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

## சொகுசுவாகன பகிர்வு முற்றுகிறது இழுபறிநிலை

கால்நடை வள அமைச்சிற்குரிய சொகுசு ரக வாகனங்கள் அனைத்தையும் அமைச்சர் ஹரிசன அவரது அதிகாரிகளும் பயன்படுத்தி வருவதாக விடமைப்பு மற்றும் பெருந் தோட்டத்துறை அமைச்சர் பழனி திகாம்பரம் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இதனால் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் திகாம்பரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய அரச ஆட்சியின் போது ஆறுமுகன் தொண்டமான் வகித்து வந்த கால்நடை வள அமைச்சின் பொறுப்புகள் தற்போது பழனி திகாம்பரம் மற்றும் பீ.ஹரிசன் ஆகிய அமைச்சர்கள் இருவருக்கிடையில் பகிரப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அமைச்சிற்குரிய வாகனங்களைப் பகிர்ந்து கொள்வதில் இரு அமைச்சர்களுக்கும் இடையே முரண்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரச்சினை குறித்த முறைப்பாடு தொடர்பில் ஜனாதிபதி இன்னும் எதுவித நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மஹிந்தவுக்காக குரல் கொடுக்க முஸ்லிம் எம்.பி.க்கள் தயார்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர். கட்சியின் பிரதமர் வேட்பாளராக மஹிந்த போட்டியிட்டால் அதற்கு ஆதரவளிக்கப்படும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும், கட்சியின் மத்திய செயற்குழு எடுக்கும் தீர்மானத்திற்கு தாம் இணங்குவதாகத் தெரிவித்துள்ளனர். தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்டால் அவருக்கு ஆதரவளிக்கவே விரும்புவதாக சுதந்திரக் கட்சியின் தற்போது அங்கம் வகித்து வரும் முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையை எதற்காக அரவணைக்க வேண்டும்?

## ஒரு அமெரிக்கப் பார்வை

**அமெரிக்க இராஜாங்க மற்றும் பாதுகாப்புத் திணைக்கள முன்னாள் உயர் அதிகாரிகளான ரிச்சர்ட் ஆர்மிரேஜ் மற்றும் காரா பியூ ஆகியோருடன் இணைந்து அரசியல் ஆய்வாளர் லிசா கேட்டிஸ்** The Wall Street Journal **இதழில், எழுதியுள்ள கட்டுரை.**

நன்றி: புதினப்பலகை

இலங்கை கடந்த ஆண்டுகளில் அமெரிக்காவின் வெளியுறவுக் கோட்பாட்டை முதன்மைப்படுத்தி செயற்பட்டது மிகவும் அரிதாகும். ஆனால் கடந்த மாத ஆரம்பத்தில் இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் பெறுபேறானது ஆச்சரியப்படத்தக்க வகையில் அமைந்ததன் பின்னர், அமெரிக்கா தொடர்பான வெளியுறவுக் கோட்பாடு இலங்கையின் நிகழ்ச்சி நிரலில் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

பத்து ஆண்டுகளாக அதிகாரத்துவ மற்றும் ஊழல் நிறைந்த ஆட்சியை நடாத்திய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போது நடந்து முடிந்த அதிபர் தேர்தல் மூலம் தோற்கடிக்கப்பட்டமையானது ஒரு அதிர்ச்சி தரும் விடயமாகும்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தின் போது இவருக்கு எதிராக ஒரு பலமுள்ள அரசியற் கட்சி செயற்படவில்லை. உள்நாட்டுப் போரின் பின்னர் நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீளிணக்கப்பாடு மற்றும் பொறுப்புக்கூறுதல் போன்றவற்றையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளவில்லை.

இந்த நாட்டின் முக்கிய பொறுப்புக்களை ராஜபக்ஷவின் குடும்ப அங்கத்தவர்கள் தமது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்த அதேவேளையில் ஜனாதிபதி தேர்தலின் பெறுபேறானது மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ராஜபக்சவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலரான மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான எதிரணியை ஆதரித்து மக்கள் வாக்களித்தனர். இலங்கை ஜனாதிபதி கொண்டுள்ள நிறைவேற்று அதிகார முறைமையை மட்டுப்படுத்தி, சுதந்திரமான செயற்பாட்டிற்கு வழிவகுக்கக்கூடிய வகையில் நாட்டின் அரசியல் யாப்பில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதாக சிறிசேன தனது தேர்தல் பரப்புரையில் குறிப்பிட்டிருந்தார்.

சீனாவுடன் இலங்கை கொண்டிருந்த மிகவும் நெருக்கமான உறவில் மிகவும் எச்சரிக்கையுடன் நடப்பதாகவும் வாக்களித்தார்.

இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள அமைதி நிலையை கவனிக்கத் தவறக் கூடாது. யாருடன் இணைந்து நாட்டை முன்னேற்ற முடியும் என்பது இலங்கையர்களின் முன்னுள்ள தற்போதைய தெரிவாகும்.

சீனா மட்டும் இலங்கையின் நட்பு நாடாக இருக்க வேண்டும் என்பதல்ல. இலங்கையில் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய அரசாங்கத்துடன் தொடர்பைப் பேணுவதற்கான நகர்வுகளை அமெரிக்கா விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

இதன் முதற்கட்டமாக, இலங்கையின் ஜனாதிபதி சிறிசேனவை வொஷிங்டனுக்கு அழைத்துப் பேச்சுக்களை நடாத்த வேண்டும். அதாவது இன மீளிணக்கப்பாடு, இலங்கையில் ஜனநாயக நிறுவகங்களை மீளவும் நிறுவுதல், இலங்கையின் வெளியுறவுக் கோட்பாட்டை பரந்துபடச் செய்தல் போன்றன உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் தொடர்பாக அமெரிக்கா பேச்சுக்களை நடாத்த வேண்டும்.

மிகவிரைவாக அமெரிக்கா சிறிசேனவைத் தனது நாட்டிற்கு வருமாறு அழைப்பதன் மூலம் அது இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்கா புதியதொரு அத்தியாயத்தை ஆரம்பிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் கேள்வி களுக்கு இலங்கை பதிலளிக்க வேண்டும் என உந்துதலளிப்பதற்குமான ஒரு வாய்ப்பாகக் காணப்படும்.

இலங்கையில் அமெரிக்கா தனது வர்த்தகச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான ஒரு தக்க தருணமாக இது காணப்படுகிறது. தென்னாசியாவில் வர்த்தகச் செயற்பாடுகளுக்கான சிறந்த சூழலைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுவதாக Heritage Foundation-Wall Street Journal இன் 2015ம் ஆண்டிற்கான பொருளாதார சுதந்திரத்திற்கான சுட்டியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆடை உற்பத்தியானது தற்போது அதிகரித்துள்ளது. அதாவது கடந்த பத்தாண்டில் இலங்கையர் ஒருவரின் தனிநபர் வருமானமானது 1000 டொலர்களிலிருந்து 3300 டொலர்களாக அதிகரித்துள்ளன.

அமெரிக்கா ஏற்கனவே இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளியாகக் காணப்படுகிறது.



**இலங்கையின் புதிய தலைமையானது ராஜபக்ஷவின் சீன ஆதரவுக் கோட்பாடுகளை நீக்குவதற்கான தனது நல்லெண்ண சமிக்ஞையைக் காண்பித்துள்ளது. இந்நிலையில், அமெரிக்க, இந்திய மற்றும் யப்பான் அரசாங்கங்கள் இலங்கையுடன் இணைந்து உறுதியான நகர்வுகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.**

ஆனால் அமெரிக்காவானது இலங்கையின் முன்னைய போர் வலயமான வடக்கு கிழக்கில் அடிக்கட்டுமானத் திட்டங்களுக்கு முதலீடு செய்வதன் ஊடாக தனது பொருளாதார ஈடுபாட்டை மேலும் அதிகரிக்க முடியும்.

நாட்டின் ஜனநாயக செயற்பாடுகளில் இலங்கை இராணுவத்தினர் பங்குபற்றுவதற்குத் தகுதியற்றவர்களாவர். ஆனால் இது தொடர்பில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டும்.

இதற்காக அமெரிக்காவானது இலங்கையுடன் இராணுவ சார் தொடர்புகளை மீளவும் நிலைநிறுத்துவது தொடர்பாக கருத்திற்கொள்ள வேண்டும். இலங்கையுடன் இத்தகைய இராணுவ சார் தொடர்புகளை அமெரிக்கா பேணிய போதிலும் 2008இல் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்களை அடுத்து இது குறைக்கப்பட்டது.

யப்பான், இந்தியா போன்று அமெரிக்காவும் இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதுடன் அடிப்படை அரசியற் கோட்பாட்டு நகர்வுகளிலும் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

இலங்கையின் புதிய தலைமையானது ராஜபக்ஷவின் சீன ஆதரவுக் கோட்பாடுகளை நீக்குவதற்கான தனது நல்லெண்ண சமிக்ஞையைக் காண்பித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்க, இந்திய மற்றும் யப்பான் அரசரங்கங்கள் இலங்கையுடன் இணைந்து உறுதியான நகர்வுகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் தேசிய மீளிணக்கப்பாடு போன்றவற்றை அமெரிக்க அரசாங்கம் முன்னுரிமைப்படுத்தும் அதேவேளையில், இலங்கையின் புதிய அரசாங்கம் தனது நாட்டில் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவது உள்ளடங்கலாக பல்வேறு மாற்றங்களை அமுல்படுத்துவது தொடர்பில் அமெரிக்க அரசாங்கம் மூலோபாயப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சிறுபான்மை மக்களின் அவாக்களைத் தீர்த்து வைப்பதாக சிறிசேன வாக்குறுதி வழங்கியுள்ளார். ஆனால் இவர் இதனைச் செயலாற்றுவதற்கான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.


மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், ஜனநாயகத்தை மீளநிறுவுதல் மற்றும் சட்ட ஆட்சியை நிலைநிறுத்துதல், வர்த்தக மற்றும் பிராந்திய பொருளாதார ஒருமைப்பாட்டை நிறுவுதல், இந்திய-பசுபிக் பிராந்திய நலனைப் பாதுகாத்தல் போன்றன உள்ளடங்கலாக அமெரிக்கா தனது நலன்களை அடைந்து கொள்வதற்காக இலங்கையுடன் நெருங்கிய உறவைப் பேணுவதற்கான நேரம் இதுவாகும்.

அமெரிக்க-இலங்கை உறவுகளை மீளவும் நிறுவுவதற்கான திட்டங்கள் எதனையும் அமெரிக்கா முன்னெடுக்காது விட்டால் இது 21 மில்லியன் மக்களைக் கொண்ட கேந்திர முக்கியத்துவம் மிக்க இலங்கைத்தீவுடன் நெருக்கமான உறவைப் பேணுவதற்கான வாய்ப்பை இழப்பதற்கான ஆபத்தை எதிர்நோக்க வேண்டியேற்படும். நாட்டில் ஜனநாயகத்தை மீளவும் நிறுவுவதற்கான மிகப் பெரிய நகர்வை இலங்கையர்கள் முன்னெடுத்துள்ளனர். சிறிசேனவின் தலைமையின் கீழ் இலங்கையானது சீனாவால் இந்திய மாக்கடலில் மேற்கொள்ளப்படும் “முத்து மாலைத்” திட்டத்தை நீக்குவதற்கான நகர்வை முன்னெடுத்துள்ளது.

**அமெரிக்கா தனது நலன்களை அடைந்து கொள்வதற்காக இலங்கையுடன் நெருங்கிய உறவைப் பேணுவதற்கான நேரம் இதுவாகும். அமெரிக்க–இலங்கை உறவுகளை மீளவும் நிறுவுவதற்கான திட்டங்கள் எதனையும் அமெரிக்கா முன்னெடுக்காது விட்டால், 21 மில்லியன் மக்களைக் கொண்ட கேந்திர முக்கியத்துவம் மிக்க இலங்கைத் தீவுடன் நெருக்கமான உறவைப் பேணுவதற்கான வாய்ப்பை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியேற்படும்.**

# மூடிய அறையில் பேசிய இரகசியம்

## வெளிவர மறுக்கும் உண்மைகள்



நியூயோர்க் சென்றுள்ள வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர, நேற்று முன்தினம் ஐ.நா. தலைமையகத்தில் அதன் செயலாளர் பான் கீ மூனை சந்தித்து இலங்கை மனித உரிமைகள் விவகாரம் குறித்து பேசினார். மூடிய அறைக்குள் இந்தப் பேச்சு இடம் பெற்றுள்ளது. இந்தச் சந்திப்புக் குறித்து ஐ.நா. தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளவை வருமாறு:- மங்கள சமரவீர மற்றும் பான் கீ மூன் ஆகியோர் இலங்கையின் மனித உரிமை விவகாரம், பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவது குறித்து விவாதித்தனர். இதன் போது புதிய அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தை வரவேற்ற பான் கீ மூன், புதிய அரசுக்கு தனது ஆதரவையும் தெரிவித்தார். இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இருவரும் விரிவாக ஆராய்ந்தனர். இதன்போது, ஐ.நா. சபை முன்னெடுக்கும் "சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்" திட்டத்தை இலங்கையிலும் தாம் முன்னெடுப்பர் என பான் கீ மூன் குறிப்பிட்டார். இலங்கையில் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான ஐ.நா.வின் திட்டங்கள் தொடரும் என்றும், இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் ஐ.நா.வின் உதவிகள் தொடர்ந்து கிடைக்கும் என்றும், ஐ.நா. பொதுச்செயலர் உறுதியளித்துள்ளார் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சருடன், ஐ.நா.வுக்கான பிரதிநிதி பாலித கொஹன்னவும், ஐ.நா. பொதுச்செயலருடன் ஐ.நா. உதவிச் செயலர் ஒஸ்கார் பெர்னான்டஸ் தரங்கோவும் கலந்து கொணடனர். இந்தச் சந்திப்பை ஒளிப்படம் எடுக்க செய்தியாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஐ.நா.வின் அதிகாரபூர்வ ஒளிப்படப் பிடிப்பாளர் மட்டுமே அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# என்னை ஓரம் கட்ட முயற்சித்தார் பசில்

## தோல்விக்கும் அவரே காரணம்





முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச, தம்மை ஓரம் கட்ட முயற்சித்தார் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார். சிங்கள பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அவர், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தோல்வியைத் தழுவ பசில் ராஜபக்சவும் ஓர் காரணமாவார்.

முழுப் பிழையையும் அவர் மீதே சுமத்திவிட முடியாது.பசில் ராஜபக்ச என்னுடன் கோபித்துக் கொண்டிருந்தார். எனது விபரங்களை எனது செய்திகளை அரச ஊடகங்களில் பிரசாரம் செய்ய வேண்டாம் எனவும் அவர் உத்தரவிட்டிருந்தார்.இந்த விடயங்கள் குறித்து நான் தனியான செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் தெளிவுபடுத்துகின்றேன்.

என்னிடம் உலங்கு வானூர்தி உண்டு. உலங்கு வானூர்தி வைத்திருப்பது அவ்வளவு பெரிய விடயமல்ல.50 மில்லியன் கொடுத்து உலங்கு வானூர்தி வாங்கினேன். சிலர் 40 மில்லியன் பெறுமதியான வாகனங்களை வைத்திருக்கின்றார்கள்.நான் ஓர் வர்த்தகர், வங்கிக் கடன் பெற்று பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றேன். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் பலப் பிட்டியவில் போட்டியிடுவேன் மக்கள் என்மீது நம்பிக்கை கொணடுள்ளனர் எனத்தெரிவித்துள்ளார்.

# மோடியுடன் மைத்திரி என்ன பேசுவார்





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வ பயணமாக நாளை இந்தியாவுக்குப் பயணிக்கவுள்ளார். எதிர்வரும் 18ஆம் திகதி வரை இந்தியாவில் தங்கியிருக்கும் அவர் பல் வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். அவர் அங்கு அந்நாட்டின் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகத்தால் இலங்கை குறித்து முன்வைக்கப்படவுள்ள மனித உரிமைகள் அறிக்கை மற்று தமிழ் பேசும் மகளுக்கான அரசியல் தீர்வு, இரண்டு நாடுகளுக்கு இடையிலான மீனவர் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால கலந்துரையாடவுள்ளார்.

மேலும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு முதலீடுகளை கொண்டுவருவதற்கும் இரு தரப்பு உறவை வலுப்படுத்துவதற்குமான பேச்சுகளும் இந்தச் சந்திப்பில் முன்னெடுக்கப்படவுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, சம்பிக்க ரணவக்க மற்றும் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோரும் இந்தியா செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடு கடத்த தடை



முன்னிலை சோசலிஸக் கட்சியின் அரசியல்துறை உறுப்பினர் குமார் குணரட்ணத்தை எதிர்வரும் 18ஆம் திகதி வரை நாட்டிலிருந்து வெளியேற்ற எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தன்னை சட்டவிரோதமாக நாட்டிலிருந்து வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக குமார் குணரட்ணம் மனுவொன்றை தாக்கல் செய்தார். இதையடுத்தே உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

முன்னதாக, குமார் குணரட்ணத்தை 13ஆம் திகதி வரை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டாமென குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அண்மையில் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

நேற்று முன்தினம் இந்த மனு மீதான விசாரணை நடைபெற்ற வேளையே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

# 13 ஆவது திருத்தம் முழுமையான அமுலாக்கம்

## டில்லியின் அழுத்தம் வேண்டும்

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசாங்கம் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சி மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய தமிழ் மக்கள் மாற்றமொன்றை எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# படையினருக்கு பாராட்டு விழா

## யுத்த வெற்றி விழாவுக்குப் பதிலாக

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட மே 18 ஆம் திகதியீல் நிகழ்வுகளை நடாத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான புதிய கூட்டணியரசு தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் மகிந்த ஆட்சியில் பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்ட "போர் வெற்றி விழா"வா்னது பெயர் மாற்றத்துடன் "இராணுவ பாராட்டு விழா"வாக புதிய ஆட்சியிலும் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. "புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பங்களிப்பு வழங்கிய முப்படை, பொலிஸ், சிவில் படையணி ஆகியவற்றைக் கௌரவிப்பதற்கும், இதன்போது உயிரிழந்த முப்படை, பொலிஸ், சிவில் படையணிகளின் அதிகாரிகளை நினைவுகூரவும் 2009 இல் இருந்து வருடாந்தம் மே 18 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததோர் தினத்தில் நடைபெறும் யுத்த வெற்றி விழா பேரணியை இவ்வருடத்தில் இராணுவ பாராட்டு நிகழ்வாக நடாத்துவது பொருத்தமாக இருக்கும் - என்ற பிரேரணையை பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதியே அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். இதற்கு அமைச்சரவையும் ஒப்புதல் வழங்கியுள்ளது. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட மே 18ஆம் திகதியை மகிந்த அரசு சுதந்திர தின நிகழ்வுக்கு ஒப்பான வகையில் கடந்த காலங்களில் கொண்டாடி வந்தது. இது இன நல்லிணக்கத்துக்குப் பெரும் சாபக்கேடு என்று ஜே.வி.பி. உள்ளிட்ட அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டின. அத்துடன் இவ்வாறான நிகழ்வுகள் தேவையில்லை என்றும் கூறி வந்தன. தற்போதைய ஆட்சியில் பிரதான பங்காளராக இருக்கும் ஐ.தே.க.கூட அன்று மேற்படி நிலைப்பாட்டிலேயே இருந்தது. எனினும், போர் முடிவுக்கு வந்த தினத்தில் அரசு கொண்டாடும் வகையில் ஆட்சி மாற்றத்தின் பின்பும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை கவலையளிப்பதாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சுதந்திர தினத்தில் நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்தவர்களையும், இராணுவத்தையும் கௌரவிப்பது பொருத்தமாக இருக்கும் என்றும், எனவே, இதற்குப் பிறிதொரு நிகழ்வு தேவையில்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். இராணுவ பாராட்டு விழா மே மாதத்தில் நடைபெறும் என மைத்திரி அரசு அறிவித்தாலும், அது எவ்வாறு கொண்டாடப்படும் என்பது குறித்த விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

# மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரம்

## பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருக்கு



பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான விஜேவர்த்தனவின் மேற்பார்வைக்குள் வரும் வகையில் ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன வெறுமனே நான்கு நிறுவனங்களை மாத்திரமே ஒதுக்கியுள்ளார். ஜனாதிபதியின் கீழ் பத்து பாதுகாப்பு நிறுவனங்களின் பொறுப்பு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த 10ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் கீழ் ருவான் விஜேவர்த்தன மேற்பார்வையில் தற்போதைய நிலையில் தேசிய கடெற் கோப், ரணவிரு சேவா அதிகாரசபை, பாதுகாப்பு சேவைகள் கல்லூரி மற்றும் பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரி ஆகிய நான்கு நிறுவனங்கள் மாத்திரமே உள்ளன. இந்த நடவடிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள விமர்சகர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மெதுவாக மிகவும் பயங்கரமான பாதையில் பயணிக்க முற்பட்டுள்ளார். இது நாட்டுக்கு நல்லதல்ல என்று எச்சரித்துள்ளனர்.

# குழந்தைகளில் கவனம் செலுத்தாத பெற்றோர் மீது சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமது குழந்தைகளை வளர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தாத பெற்றோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோரின் கவனயீனமே அதிகமாகக் காணப்படுகிறது.

கடந்த 24 ஆம் திகதியிலிருந்து இம் மாதம் 9 ஆம் திகதி வரை 2 வயதுக்கும் 4 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண, இந்த துர்ப்பாக்கிய சம்பவங்களுக்கு பெற்றோர் தமது குழந்தைகளுக்கு சரியான முறையில் பாதுகாப்பு வழங்கத் தவறியமையே காரணம் என்றார்.

அது மட்டுமன்றி இவ்வாறான பெற்றோர்கள்மேல் இனிவரும் காலங்களில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை தொடர்மாடியிலிருந்து கடந்த 24ஆம் திகதி சபீனா (வயது - 4) என்ற பெண் குழந்தையொன்று விழுந்து உயிரிழந்தது. அக்குழந்தை தனது சகோதரியுடன் லிப்டில் பயணித்ததை மட்டுமே சீ.சீ.ரி.வி கமரா வில் பார்க்க முடிந்தது. பின்னர் எவ்வாறு அந்தக்குழந்தை தொடர்மாடியிலிருந்து விழுந்தது என்பது தெரியவில்லை.

குறித்த பெண்குழந்தையையும், சகோதரியையும் பெற்றோர் சரியான முறையில் கண்காணிக்கத் தவறியமையே காரணம். அதுமட்டுமன்றி கடந்த 3ஆம் திகதி 2 வயது குழந்தை ஒன்றும் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு உணவு ஊட்டி விட்டு உள்ளே சென்றுவிட்டு வந்து பார்த்த போது குழந்தையைக் காணவில்லை. சிறிது நேரத்தின் பின்னர் குழந்தை அருகிலுள்ள ஆற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இதற்கும் முக்கிய காரணம் குழந்தை மீது தாயின் அக்கறையின்மையே ஆகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பல குற்றச் சாட்டுக்களையும் இறப்புக்களின் விபரங்களையும் வெளியிட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குழந்தைகள் அதிகம் உயிரிழப்பதற்கு பெற்றோர், பாதுகாவலரின் கவனயீனமே காரணம் என திட்டவட்டமாக தாம் கருதுவதாகவும் தமது குழந்தைகள் தொடர்பில் கவனம் செலுத்தாத பெற்றோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# பாடசாலைக்கு முன்பாக விபத்து பலியானது கன்றுக்குட்டி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கு முன்னால் கடந்த வியாழக்கிழமை காலை விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வேகமாக வந்த டிப்பர் வாகனத்தால் மோதுண்டு தூக்கி எறியப்பட்ட நிலையில் கன்றுக் குட்டி ஒன்று சம்பவ இடத்திலேயே மரணித்துள்ளது.

குறித்த ஏ - 9 வீதியில் டிப்பர் வாகனங்கள் அதிவேகமாக பயணிக்கின்றன. இதனால் விபத்துக்களும் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன. பாடசாலைக்கு முன்னால் மஞ்சள் கோடிட்ட பாதுகாப்பான வீதிக் கடவை இருந்தும் வாகன சாரதிகள் அதைக்கவனத்தில் எடுக்காது அசிரத்தையாக வாகனங்களை ஓட்டுவதனால்தான் இவ்வாறான விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இன்று ஒரு கன்றுக் குட்டி உயிரிழந்ததைப் போல் நாளை மாணவ, மாணவியரின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு யார் பொறுப் பேற்பது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# ஆறாவது திருமணம் செய்யமுயன்றவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

5 திருமணங்கள் செய்து ஆறாவதாக 20 வயது பெண்ணொருவரைத் திருமணம் செய்ய முயன்ற 56 வயதுடைய சுவிஸ் நாட்டு பிரஜையை எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் கணேசராசா மாணிக்கவாசகர் கடந்த புதன் கிழமை உத்தரவிட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக திருகோணமலை பொலிஸிலும் முறைப்பாடொன்று இருப்பதால் திருகோணமலை பொலிஸாருக்கு அறிக்கை வழங்கும் படியும் சந்தேகநபரின் வங்கிக் கணக்கை இடைநிறுத்தி வைக்கும் படியும் நீதிவான் கூறினார்.

56 வயதுடைய முதியவர் 20 வயது யுவதியொருவரை திருமணம் செய்யப் போவதாக அறிந்த அப்பிரதேச சிவில் குழு உறுப்பினர்கள், நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு இது தொடர்பான தகவல்களை வழங்கினர். பொலிஸ் விசாரணையின் போது சுவிஸிலிருந்து வந்ததாக தெரிவித்த அவரிடம் கடவுச்சீட்டு உட்பட எந்தவொரு ஆவணமும் இருக்கவில்லை என்று தெரியவந்தது.

இந் நிலையில் அவரைக் கைது செய்த பொலிஸார் நீதி மன்றத்தில் ஆஜர்ப்படுத்திய போதே நீதிவான் மேற்கண்ட உத்தரவினைப் பிறப்பித்தார்.



## சொல்லாத சேதி 01

எஸ். அனசூயா

# பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு யார் காரணம்?

தமக்கு வேலைவாய்ப்பு வழங்கவேண்டும் என்று கூறி மீண்டும் பட்டதாரிகள் போராட்டங்களை நடாத்தத் தொடங்கியுள்ளனர். புதிய ஆட்சி மாற்றத்தின் பின்னர், யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் இவ்வாறான போராட்டங்கள் நடைபெற்றிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

க.பொ.த. உயர்தரத்துக்குத் தோற்றும் சுமார் 3 இலட்சம் வரையிலானவர்களில், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் சுமார் 25,000 வரையிலானவர்கள், தமது பட்டக்கல்வியை நிறைவுசெய்த பின்னர் ஒவ்வொரு முறையும் இப்படி தம்மைத் தாமே வேலையற்ற பட்டதாரிகள் (வேலையற்ற என்று சொல்லாமல், வேலை தேடும் என்று சொல்லலாமே?) என்று பிரகடனப்படுத்திப் போராட்டங்களை நடாத்துவது வழக்கமாகவே இருந்து வருகிறது.

க.பொ.த. உயர்தரத்தை நிறைவு செய்தவர்களில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் சுமார் 10 சதவீதத்துக்கும் குறைவான இந்த மாணவர்களுக்கு, பெருமளவு நிதியைச் செலவிட்டு 15 பல்கலைக்கழகங்களிலும், மேலும் பல உயர்கல்வி நிறுவனங்களிலும் இலவசமாக பட்டக்கல்வி வழங்கப்படுகிறது. இருந்தும், அந்தப் பட்டக்கல்வியைக் கொண்டு தமக்கான வேலைவாய்ப்புக்களைத் தேடிக்கொள்ள முடியாதவர்களாக ஒவ்வொரு பட்டம் பெற்ற அணியிலிருந்தும் போராட்டக்குரல்கள் முன்வைக்கப்படுவது வழக்கமாகிவிட்டது.

இவர்கள் அனைவருமே தமக்கு அரசாங்க உத்தியோகம்(அப்படி ஒரு உத்தியோகம் இருக்கிறதா? உண்மையில் பொதுமக்கள் சேவைத்துறை (Public Service) என்றுதான் இது அழைக்கப்படுகிறது) வழங்கப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பில்தான் இத்தகைய போராட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

இலங்கையின் மொத்த வேலைவாய்ப்புக்களில் வெறும் 12 சதவீதமே இருக்கக்கூடிய இந்தப் பொதுத்துறையில் தமக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பதுதான் இவர்களது ஒரே கோரிக்கையாக இருக்கிறது. மீதம் 88 சதவீத வேலைவாய்ப்புக்கள் இருக்கக்கூடிய தனியார்துறையில் பணியாற்ற இவர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

தனியார்துறையை விட ஓய்வூதியம் வழங்கக்கூடிய பொதுத்துறையையே விரும்புவது இவர்களது மனோபாவம் என்றாலும், உண்மையில், பெரும்பாலான பட்டதாரிகள் தனியார்துறையில் பணியாற்றுவதற்கு அவசியமான தொழிற்திறன்களைக் கொண்டிருக்காததும், இவர்கள் தனியார்துறையில் வேலைவாய்ப்புக்களைப் பெற முடியாமைக்கு முக்கிய காரணமாகும்.

அதாவது, பெரும்பாலான பட்டதாரிகள் தொழில்வாண்மை உள்ளவர்களாக இல்லாதிருப்பதே அவர்களால் பட்டக்கல்வியை நிறைவுசெய்த பின்னரும் தொழில்வாய்ப்பொன்றைத் தேடிக்கொள்ள முடியாதிருப்பதற்குக் காரணமாகும்.

பட்டதாரிகளின் இந்த நிலைமைக்கு உண்மையில் அவர்கள் மட்டுமே காரணம் என்று குற்றஞ்சுமத்திவிட முடியாது. 3-4 வருடங்களாக மாணவர்களுக்கு பட்டக்கல்வியை வழங்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் இவர்களுக்கு வேண்டிய தொழில் திறன்களை ஏன் வழங்குவதில்லை?

குறைந்தபட்சம் தொழிற்சந்தையில் அதிகம் எதிர்பார்க்கப்படும் கணினி, ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் திறன்கள் உள்ளிட்ட மென்திறன்கள் பட்டக்கல்விக் காலத்தில் இவர்களுக்கு வழங்கப்படுவது அவசியமல்லவா?

பெருமளவு நிதியைச் செலவிட்டு இவர்களுக்கு பட்டக்கல்வியை வழங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் இவர்களுக்கு இந்த ஆற்றலை வழங்காமல் வெறுமனே பட்டத்தை மட்டும் வழங்கி தொழிலுக்காக வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளிவிடுவது ஏன்?

விரிவுரையாளர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்கவேண்டும் என்று தங்களுடைய நலன்களுக்காக மட்டுமோ அன்றி, பேரவை உறுப்பினர்கள் பதவி விலகவேண்டும், சம்பந்தனும், சுமந்திரனும் துரோகிகள், ஐ.நா. போர்க்குற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என்று தமக்குச் சம்பந்தமில்லாத விடயங்கள் எல்லாவற்றுக்கும் போராட்டங்களை நடத்தும் பல்கலைக்கழக கல்விசார் சமூகம், இவ்வளவு நிதிச்செலவீனத்துடன் வழங்கப்படும் பட்டக்கல்வி, மாணவர்களுக்கு தொழிற்திறன்களை வழங்குகிறதா என்பது குறித்தும் கவனம் செலுத்தவேண்டியது அவசியமல்லவா?




ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மாற்றம் பற்றிய கோரிக்கைகளை முன்வைத்த ஆசிரியர் சங்கப் பிரதி நிதிகள், தாம் விரும்பிய மாற்றம் ஏற்பட்ட பின்னரும் அரசியல்வாதிகள்போல் ஏதாவது எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்திக்கொண்டிராமல், தமக்கும், தமது குடும்பத்தினருக்கும் அதிக தொகையில் வருமானத்தை அள்ளித்தரும் தமது தொழில் மூலம் இளைஞர்களின் எதிர்காலத்தை வளமாக்குவதற்கு அவசியமான மாற்றம் குறித்து கவனம் செலுத்த வேண்டாமோ.......?

# முதல் ஆட்டத்தில் அசத்தியது நியூசிலாந்து




(கிறிஸ்ட்சேர்ச்)

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதல் லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 98 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஏ பிரிவுக்கான முதல் போட்டி நேற்று நியூசிலாந்தின் கிறிஸ்ட்சேர்ச்சில் நடைபெற்றது. இதில் இலங்கை, நியூசிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலரந்து அணி சொந்த மண்ணில் அரங்கம் அதிரும் வகையில் இலங்கை அணியின் பந்து வீச்சாளர்களை பிரட்டியெடுத்து பட்டையைக் கிளப்பியது. குறிப்பாக, அண்டர்சன், மக்கலம், வில்லியம்ஸன் ஆகியோர் தங்கள் திறன்களை சிறப்பான முறையில் வெளிப்படுத்தி ஓட்டங்களை வாரிக் குவித்தனர். நிறைவில் நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அண்டர்சன் 46 பந்துகளை எதிர்கொண்டு எட்டு பவுண்டரிகள், இரு சிக்ஸர்கள் அடங்கலாக 75, மக்கலம் 49 பந்துகளை எதிர்கொண்டு பத்து பவுண்டரிகள் அடங்கலாக 65, வில்லியம்ஸன் 57, குப்ரில் 49, ரஞ்சி, எலைற் ஆகியோர் தலா 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லக்மல், ஜீவன் மெண்டிஸ் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 332 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணிக்கு டில்சான், திரிமன்னே ஜோடி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்தது. இந்த ஜோடி 61 ஓட்டங்களைப் பெற்ற வேளை பிரிக்கப்பட இலங்கை அணியின் ஏனைய விக்கெட்டுக்கள் வேகமாக சரிக்கப்பட்டன. அனுபவம் மிக்க அசுரர்களான மஹேல, சங்கா, டில்சான் ஆகியோர் ஆட்டம் கண்டபோதிலும் கப்டன் மத்தியூஸ் ஒருமுனையில் தன் பங்கிற்கு போராடினார். ஆனாலும் அது வெற்றிக்கு உதவும் வகையில் அது அமையவில்லை. நிறைவில் இலங்கை அணி 46.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றுத்தோல்வியைத் தழுவியது. இதில் திரிமன்னே 67, மத்தியூஸ் 46, சங்கக்கார 39, டில்சான் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரிம் சௌத்தி, போல்ட், விட்டோரி, அண்டர்சன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டம் பந்துவீச்சில் ஜொலித்த அண்டர்சன் தெரிவு செய்யப்பட்டார்.

**ஒரே பார்வையில் போட்டி முடிவு**

**நியூசிலாந்து 331/6 (50)**

| | | | |
|---|---|---|---|
| அண்டர்சன் | 75 (46) | லக்மல் | 2/62 |
| வில்லியம்ஸன் | 57 (65) | ஜீவன் மெண்டிஸ் | 2/52 |
| மக்கலம் | 66 (49) | ரங்கன ஹேரத் | 1/37 |
| குப்ரில் | 49 (62) | குலசேகர | 1/78 |

**இலங்கை 233/10 (46.1)**

| | | | |
|---|---|---|---|
| திரிமன்னே | 67 (60) | ரிம் சௌத்தி | 2/43 |
| சங்கக்கார | 39 (38) | போல்ட் | 2/64 |
| மத்தியூஸ் | 46 (52) | டானியல் விட்டோரி | 2/34 |
| டில்சான் | 24 (41) | அண்டர்சன் | 2/18 |

**98 ஓட்டங்களால் நியூசிலாந்து வெற்றி. ஆட்டநாயகன் : அண்டர்சன்**



ICC CRICKET WORLD CUP 2015

## நாளைய ஆட்டம்

**மே. தீவுகள் எதிர் அயர்லாந்து**

இடம்: நெல்சன்

நேரம்: காலை 3.30 (இலங்கை நேரம்)

# ஆரோன் பிஞ்ச் சதம்; ஆஸி. அசத்தல் வெற்றி

(மெல்பேர்ன்)

ஆரோன் பிஞ்சின் அதிரடிச் சதத்தின் மூலம் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஏ பிரிவுக்கான இரண்டாவது போட்டி நேற்று அவுஸ்ரேலியாவின் மெல்பேர்னில் நடைபெற்றது. இதில் இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி பிஞ்ச், மைக்ஸ்வெல் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில்

அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆரோன் பிஞ்ச் 128 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 135 ஓட்டங்களை விளாசியதுடன் 11ஆவது உலகக் கிண்ணப் போட்டியில் முதல் சதத்தைப் பதிவு செய்த வீரர் என்ற சிறப்பையும் பெற்றது. மற்றும் கப்டன் பெய்லி 55, மைக்ஸ்வெல் 11 பவுண்டரிகள் அடங்கலாக 66, ஹடின் 31, எம். மார்ஷ் 23, டேவிட் வோர்னர் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பின் ஐந்து, புரொட் இரு விக்கெட்டுக்களைக் கைப் பற்றினர்.

பதிலுக்கு 343 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி மார்ஷின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியால் திண்றியதுடன் விக்கெட்டுக்களையும் வேகமாகப் பறிகொடுத்தது. இறுதியில் இங்கிலாந்து அணி 41.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜே. ரெய்லர் 90 பந்துகளை எதிர்கொண்டு 11 பவுண்டரிகள் அடங்கலாக 98 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். பெல் 36, வோகர் 37, பட்லர் 12, மெய்ன் அலி 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம். மார்ஷ் ஐந்து, ஸ்ரார்க், ஜோன்சன் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பிஞ்ச் தெரிவு செய்யப்பட்டார்.




**ஒரே பார்வையில் போட்டி முடிவு**

**அவுஸ்ரேலியா 342/9 (50)**

| | | | |
|---|---|---|---|
| அரோன் பிஞ்ச் | 135 (128) | பின் | 5/71 |
| மைக்ஸ்வெல் | 66 (40) | புரொட் | 2/66 |
| ஜோர்ஜ்பெய்லி | 55 (69) | வோகர் | 1/65 |
| ஹடின் | 31 (14) | | |

**இங்கிலாந்து 231/10 (41.5)**

| | | | |
|---|---|---|---|
| ரெய்லர் | 98* (90) | எம். மார்ஷ் | 5/33 |
| வோக்கர் | 37 (42) | மைக்கல் ஸ்ரார்க் | 2/47 |
| இயன் பெல் | 36 (45) | ஜோன்சன் | 2/36 |
| பட்லர் | 12 (42) | | |

**112 ஓட்டங்களால் அவுஸ்ரேலியா வெற்றி. ஆட்டநாயகன் : ஆரோன் பிஞ்ச்**

## முதல் பதிவு...

(கிறிஸ்சேர்ச்)


11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நேற்று அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய இரு நாடு களில் ஆரம்பமானது. இதில் நியூசிலாந்து, அவுஸ்ரேலிய அணி கள் சொந்த மண்ணில் வெற்றியைப் பதிவு செய்து தமது பலத்தை வெளிப் படுத்தியுள்ளன.

இந்நிலையில் 11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் முதல் சதம், முதல் ஐந்து விக்கெட்டுக்கள், முதல் வெற்றி ஆகியவற்றை மேற்படி இரு அணிகளும் பதிவாக்கியுள்ளன.


முதல் வெற்றி : நியூசிலாந்து
முதல் ஆட்டநாயகன் : அண்டர்சன்
முதல் சதம் : ஆரோன் பிஞ்ச்.
முதல் 5 விக்கெட்டுக்கள் : பின்
முதல் தோல்வி : இலங்கை

இதேவேளை, உலகக் கிண்ண வரலாற்றில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி வந்த இலங்கை அணி 11ஆவது உலகக் கிண்ண தொடரில் தோல்வியைத் தழுவியுள்ளது. இது வரை நான்கு உலக கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றிய நியூசிலாந்து அணி நான்காவதாக நேற்று கிறிஸ்சேர்சில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணியை வென்று வரலாற்றை மாற்றி எழுதியுள்ளது.


இந்த வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணியின் தன்னம்பிக்கை அதிகரித்திருப்பதாகவும், நடப்புத் தொடரில் கிண்ணம் வெல்லும் அணிகளில் முதன்மை மிக்கதாக நியூசிலாந்தும் திகழ்கின்றது எனவும் கிரிக்கெட் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.




# பாடசாலை மட்ட இல்ல மெய்வல்லுநர்

வவுனியா மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம் (160)




கிளாலி றோ.க.த.க. பாடசாலை (160)

கிளி. பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா (160)



கரணவாய் மணியகாரன் தோட்டம் (18)
அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை






வேலணை ஐயனார் வித்தியாலயம் (21)

காரைநகர் வியாவில் சைவமகாவித்தியாலயம்



# எஸ்.பொ. நினைவஞ்சலி நிகழ்வு



"கடந்த மூன்று தசாப்தங்களாக உறங்கிக் கிடந்த சில இலக்கிய அமைப்புக்கள் நாட்டில் ஏற்பட்ட ஜனநாயக சூழ்நிலையால் மீண்டும் நெட்டி முறித்துக்கொண்டு செயற்பட ஆரம்பித் துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அவ்விதம் மீண்டு செயற்படுவதால் இலக்கியச் சஞ்சாரத்தை ஏற்படுத்த முடியும்.

அவ்விதம் இருந்த மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம் அமரர் எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ) நினைவு நிகழ்வை நடத்துவது வரவேற்கத்தக்க தாகும். அவ்விதம் வேறுசில அமைப்புகளும் திரும்பவும் இயங்க முன்வரவேண்டும்."

மேற்கண்டவாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்.

கடந்த 08.02.2015 ஞாயிற்றுக் கிழமை மாலை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடந்தேறிய நம் மண்ணின் ஆளுமை எஸ்.பொன்னுத்துரையின் நினைவஞ்சலி நிகழ்வில் தலைமையுரை ஆற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமரர் பொன்னுத்துரைக்கு சர்வதேச மட்டத்தில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அவர் பிறந்த மண்ணில் காலம் தாழ்த்தியே நடைபெறுகிறது. எஸ்.பொ.எழுத்துலகில் மிகப்பெரிய ஆளுமை கொண்டவராகத் திகழ்ந்தவர். அதிகப்படியான நூல்களை எழுதிப் பதிப்பித்தார். வேறு சிலரின் எழுத்துக்களையும் பதிப்பித்து வெளியிட்டார்.

எமது மண்ணுக்கப்பால் கிழக்கு மாகாணம், புலம்பெயர்ந்த நாடுக ளிலும் இளம் படைப்பாளிகளை ஊக்குவித்து வளர்த்ததும் குறிப்பிடலாம். வடக்குக் கிழக்கு இரு பல்கலைக்கழகங்களும் புதிய மாணவர்களுக்கு அவரது நூல்களைப் பாடநெறியில் உட்படுத்த முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக கல்விப் பீடாதிபதி கலாநிதி த.கலாமணி உரையாற்றுகையில்,

"அமரர் எஸ்.பொ அவுஸ்ரேலியா வில் "இலக்கியப் பவர்" என்னும் அமைப்பை நிறுவி நடத்தி வந்தார்.

இலக்கியப் பவர் என்பதன் அர்த்தமென்ன என்று அவரிடம் வினவினேன். நெருக்கமாக இருத்தல், ஒருமித்துச் செயற்படலென விளக்கினார்.

அவ்வமைப்பு மிகக் கட்டுப்பாடு களுடன் ஒழுங்காக இயக்கப்பட்டும் வந்தது. அதில் என்னையும் இணைத் துக்கொண்டார். அவுஸ்ரேலியாவில் கலாநிதிப் பட்டத்துக்காக நான்கு வருடங்கள் கற்றுக் கொண்டிருக்கை யில் அமரர் குடும்பத்தில் ஒருவனாக இணைந்து வாழ்ந்த காலங்கள் மறக்க முடியாதன.

போட்டிகளில் கலந்து கொள்ளும் வழக்கம் இல்லாதவர். அவரது படைப்புகள் மிக உயர்ந்தனவாகத் தெரிவாகின. எனினும் அவரைக் கௌரவிக்கவும், பட்டங்கள் சூட்டவும் எவரும் முன்வந்தாரில்லை. அதே வேளை பட்டங்கள், பரிசுகளுக்காக ஆலாப் பறக்காத இறுமாப்புக் கொண்டவராகவும் பலராலும் கருதப் பட்டவராகவும் எஸ்.பொ.வாழ்ந்தார்.

அவரது இழப்பின் பின்பாகவேனும் அவரால் படைக்கப்பட்டுள்ள படைப்புகள் பற்றியும், அவரது வாழ்வியலையும் பேராசிரியர்கள் ஆய்வுசெய்ய முன்வரவேண்டும்".

அடுத்து கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப) பேசுகையில், "எஸ்.பொவின் வரலாற்றில் வாழ்தல் என்னும் இரு பாகங்களாக ஆயிரக்கணக்கான பக்கங்களிலும் உருவான பாரிய இரு நூல்களும் அவரது வாழ்வியலைக் கூறும் ஏழு காண்டங்களில் அமைந்த வரலாற்றுப் பொக்கிஷம்.

அவரது வாழ்வும், எழுத்தும் எவ்வித ஆலாபரணங்கள் இல்லாத அப்பட்ட உண்மைகளாகத் திகழ்ந் துள்ளன. எஸ்.பொ என்னும் மிகப் பெரிய ஆளுமை இது வரையில் ஆய்வு களுக்குள்ளே அகப்படாமல் போனது நல்லதென்றே கருதலாம். ஆய்வுகள் சில தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படு கின்ற வெறுமையான கண்துடைப்புகளே! அவற்றில் ஒன்றிரண்டு அங்கனேக்கை நன்றாக அமைந்துவிடுவது முண்டு. எஸ்.பொ. கலகக்காரன், பாலியல் எழுத்தாளனெனவும் புகழ் பெற்றிருந்தார்" என்றார்.

மூத்த எழுத்தாளர் ஐ.சாந்தன் பேசுகையில், "எஸ்.பொ. மாக்ஸிச எதிராளியல்லர். அவ்வமைப்பில் இருந்து அவர் வெளியேற சிலரது துரோகச் செயற்பாடுகள் காரணமாய் அமைந்தாலும் அவரது பணிகள் மாக்ஸிசத்துக்கு இன்னொரு பரிமாணத்தை வழங்கியதென்றே சொல்வேன். உழைப்பாளி வர்க்கத்தில் தோன்றியவர் மாக்ஸிச கோட்பாட்டு வாழ்க்கையை விலத்திச் சென்று விடவும் முடியாது.

குப்பிளான் ஐ.சண்முகன், மாவை மு.நித்தியானந்தன், ஐ.சாந்தன் ஆகிய இளவல் இலக்கியக் காரர்களை அவர் குறிப்பாகத் "தவ்வல்கள்" என்பதுண்டு. அவரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு கொழும்பில் தங்கி இருந்தபோது கிடைத்தது. அதனால் எங்களையும் புரட்சிக்காரர்களாக ஒருசிலர் கருதிக்கொண்டனர். அதி கம் பேசாத அவரிடம் அபரிமிதமான எழுத்தாற்றல் குடிகொண்டிருந்தது" என்று தெரிவித்தார்.

வரவேற்புரையை தேவி பரமலிங்கமும், நன்றியுரையை அமரரின் சகோதரர் ஆசிரியர் ச.சரவணமுத்துவும் நிகழ்த்தினர்.

குப்பிளான் ஐ.சண்முகன், அமரரின் இன்னொரு சகோதரர் ச.சரச்சந்திரன் ஆகியோரும் அஞ்சலி உரைகளை வழங்கினர்.

- பரமர்

# ஸர்மிளா ஸெய்யித்தின் 'ஒவ்வா'






தாயகம் ஆசிரியர் தணிகாசலம் வெளியிட எழுத்தாளர் தாட்சாயணி பெற்றுக்கொள்கிறார். உடன் நிற்பவர்கள் சோ.ப மற்றும் சதாஜினி

07.02.2015 யாழ்ப்பாணத்தில் திருமறைக்கலாமன்றத்தின் கலைக் கல்லூரில் ஸர்மிளா செய்யித்தின் "ஒவ்வா" கவிதை நூலின் அறிமுகம் நடந்தது. நிறைவான நிகழ்வு. 1990 க்குப் பிறகு, யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் பெண் படைப்பாளி ஒருவரின் புத்தக அறி முகம் நடந்திருக்கிறது என்ற வகையில் இன்னும் ஒரு பரிமாணத்தை இந்த நிகழ்வு பெற்றிருக்கிறது. நிகழ்வில் விமர்சனங்களை முன்வைத்தவர்கள் பெரும்பாலும் புதியவர்கள். ஆனாலும் மிகத் துணிச்சலாகவும் சம்பிரதாயங்களை உடைத்தும் வெளிப்படையாகவும் பேசினார்கள்.

"நான் ஒரு ஆணாதிக்கவாதியாகவே இருக்கிறேன்...." என்று அதிரடியாகப் பேசத் தொடங்கிய கிரிந்தின் உரை பலருடைய கவனத்தையும் ஈர்த்தது. ஸர்மிலாவின் கவி தைகளை மூன்று வகையாக வகைப்படுத்திப் பேசினார் கிரிஷாந்.

குகபரன் விரிவாக ஸர்மிளாவின் கவிதைகளை ஆய்வு செய்தார். சுபாஷிணியும் அப்படித்தான். ஸர்மிளாவுடனான சிநேகத்தை நினைவு கூர்ந்து அவருடைய இயல்பு மற்றும் ஆளுமைகளைப் பற்றிப் பேசினார் சுதாஜினி.

ஸர்மிளாவின் மூன்று நூல்களையும் மையமாக வைத்து, முதல் கவிதை நூல் - சிறகு முளைத்த பெண் - ணுக்கு தான் ஆற்றிய உரையையும் நினைவிற் கொண்டு பேசி னார் கவிஞர் சோ.ப. அவர்தான் நிகழ்வுக்கும் தலைமை தாங்கினார். கவிதைத் தொகுதியை தாயகம் இதழின் ஆசிரியரும் எழுத்தாளருமான க. தணிகாசலம் வெளியிட்டு வைக்க எழுத்தாளரும் கோப்பாய் பிரதேச உதவிச் செயலருமான தாட்சாயினி பெற்றுக்கொண்டார்.

நிகழ்வுக்குப் பல தரப்பினரும் வந்திருந்தனர். குறிப்பாக ஜனநாயக வெளியில் நம்பிக்கை உள்ளவர்கள். பொதுவெளியை உருவாக்குவது, அதில் தொடர்ந்து இயங்குவது என்பது மிக மிகச் சவாலாகி விட்ட தமிழ்ச்சூழலில் இத்தகைய முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை அளிக்க வேண்டிய கடப்பாடு மாற்றுச் சிந்தனையாளருக்கும் முற்போக்காளருக்கும் உண்டு. குறிப்பாக ஜனநாயகவாதிகளுக்கு. யாழ் இலக்கியக் குவியம் கலாச்சாரத்தளத்தில் ஒரு திறப்பை நிகழ்த்த முனைகிறது. இது அரசியல், சமூகவியல், பண்பாட்டுத்தளங்களிலும் நிகழ வேண்டும்.

இத்தகைய நிகழ்வுகளுக்கு ஒரு புறக்கணிப்பை அல்லது கவனியாத விலக்கலை சில தமிழ்ப் படைப்பாளிகள் செய்கின்றனர். இதெல்லாம் இன்னும் தொடர்கின்ற பின்னடைவுகள்தான். என்றாலும் இதையெல்லாம் கடந்து எப்படியோ நிகழ்வு சிறப்பாக நடந்தேறி விட்டது.

வேலணையூர் தாஸ், வினோத், கிரிஷாந் உள்ளிட்ட யாழ் இலக்கியக் குவிய நண்பர்கள் மற்றும் கலைமுகம் ஆசிரியர் செல்மர் எமில் ஆகியோர் முன்னின்று நிகழ்வை ஒழுங்கு படுத்தினர்.

யாழ் இலக்கியக் குவியம் ஒரு பொது வெளியை - பொது அரங்கை உருவாக்குவதற்குப் பங்களித்து வருகிறது என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இது யாழ்ப்பாணத்தின் கடந்த சில தசாப்தகால இயல்பின் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நெகிழ்ச்சியும் நல் விளைவுமாகும். ஒரு வட்டமாக இருந்த இலக்கியக் குவியம் இப்பொழுது பொது அரங்காக விரியத் தொடங்கியிருக்கிறது. திருமறைக்கலாமன்றமும் செல்மர் எமிலும் வழங்கி வரும் ஒத்துழைப்புகள் முக்கியமானவை.

- கருணாகரன்

# தெரிந்து கொள்ளலாம்...





- இந்தியாவிலேயே அதிகப் படங்கள் இயக்கிய பெண் இயக்குநர் - விஜயநிர்மலா. இயக்கிய படங்கள் 35.
- உலகிலேயே சினிமா தியேட்டர்கள் இல்லாத நாடுகள் - சவுதி அரேபியா, பூட்டான்.
- அதிகப் படங்களைத் தயாரித்து உலக சாதனை படைத்த தயாரிப்பாளர் - டி. ராமாநாயுடு. தயாரித்த படங்கள் - 130.
- மிகக் குறுகிய காலகட்டத்திற்குள் 100 படங்களில் நடித்த நடிகர் - சிவாஜி கணேசன். காலம் : 1952 முதல் 1964.
- திரைப்படங்களுக்கு தணிக்கையில்லாத நாடு - பிரான்ஸ்.
- மிகக் குறைந்த வயதில் ஒஸ்கார் விருது பெற்றவர் - ஷேர்லி டெம்பிள் (ஆறு வயது).
- மிக அதிக வயதில் ஒஸ்கார் விருதைப் பெற்றவர் - ஜோர்ஜ் பேர்ன்ஸ் (80 வயது).

புதிய மாணவர்களுக்கு அவரது நூல்களைப் பாடநெறியில் உட்படுத்த முன்வர வேண்டும்

பக்கங்களிலும் உருவான பாரிய இரு நூல்களும் அவரது வாழ்வியலைக்

ஆகியோரும் அஞ்சலி உரைகளை வழங்கின்.

- பரமர்



ஷெரிலி டெம்பிள் (ஆறு வயது).

❖ மிக அதிக வயதில் ஒஸ்கார் விருதைப் பெற்றவர் - ஜோர்ஜ் பேர்ன்ஸ் (80 வயது)




# சில்லறையாகத்தான் சேகரிக்க வேண்டும்...

**மதிப்புக்குரிய திரு. சம்பந்தன் அவர்களுக்கு,**

**நா**ன் தமிழ் அரசுக் கட்சி யாழ்ப்பாணத்தில் கைலாயப் பிள்ளையார் கோவில் வீதியில் 1949இல் முதலாவது கூட்டத்தை வைக்க முடியாமல், தமிழக் காங்கிரஸ் குண்டர்கள் அடக்குமுறை கையாண்ட வேளை, மேடையில் நின்றவன். அன்று அக் கூட்டத்தில் பங்குகொண்ட தமிழரசுக் கட்சியினரில் என்னைவிட எஞ்சியிருப்பவர் சிலர்தான்.

தமிழ் அரசுக் கட்சியில் இன்றுள்ள தலைமைகளில் தங்கள் சாதுரிய மிக்க பங்களிப்பைப் பெரிதும் மதிப்பவன். கடவுள் கிருபையால் தமிழ் அரசுக் கட்சிக்கு தங்கள் சேவை கிட்டியுள்ளது என்று நம்புகிறேன்.

தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பு அரசியலைக் கடைப் பிடித்து வந்த வரலாறு சரியோ என்ற கேள்வி அண்மைக் காலத்தில் என்னுள் எழுகின்றது. சௌமியமூர்த்தி தொண்டமான் சார்பு அரசியலை மேற்கொண்ட பொழுதும் அவரால் மலைநாட்டுத் தமிழ் மக்களின் லைன் வாழ்க்கையை மாற்ற முடியவில்லை என்ற எண்ணம் என்னுள் நீண்ட காலம் குடிகொண்டிருந்தது.

இன்று முதுமையில் அமைதியாகத் திரும்பிப் பார்க்கின்ற பொழுதில் சிங்கள உளவியலுக்கு ஏற்ற கொள்கையை கடைப்பிடித்து அவர் வெற்றி பெற்றுள்ளார் என்று தோன்றுகின்றது. வாக்குரிமை முழுவதுமாகப் பறிக்கப்பட்ட ஒரு சமூகம் இன்று வடமாகாண வாக்காளர் உயர்வை-சிறப்பை, எண்ணிக்கையை எட்டிக்கொண்டிருக்கிறது.

சுருக்கமாகச் சொல்வதனால் மாதச் சம்பள அரச-தனியார் உத்தியோக ரீதியில் அவர்கள் படுவேகமாக முன்னேறுகிறார்கள். பல்கலைக்கழக கலைப் பீடங்களில் அவர்கள் அதிகரித்திருக்கிறார்கள். விஞ்ஞான உயர் கல்வி கற்க அவர்கள் பாடசாலைகளில் வாய்ப்பில்லாத குறை இருந்தது. புதிய அமைச்சர் சபையில் ராதாகிருஸ்ணன் கல்வி அமைச்சர். விஞ்ஞானக் கல்விக் குறையும் ஒடிமறையப்போவதும், டாக்டர், என்ஜினியர்களாக அவர்கள் எழுவதும் தூரத்தில் இல்லை.

முன்னர் தேயிலை, றப்பர் பெருந்தோட்டப் பாடசாலை ஆசிரியர்களாக பயிற்சி பெறாத யாழ்ப்பாணத்தவர்களே கடமை புரிந்தனர். அந்த நிலைமை மாறிவிட்டது. ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்வி நிறுவனத்தில் மலைநாட்டு இளைஞர்களே ஏகமாய்ப் பயிற்சி பெறுகின்றனர். புதிய அரசு அவர்களுக்கு 7 பேர்ச் நிலம் கொடுத்து தனிவீடுகள் கட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்களித்தது. அதற்குரிய அமைச்சை திகம்பரம் பெற்றுள்ளார். சௌமியமூர்த்தி தொண்டமானால் பெற முடியாது போன தனிவீடுகூடச் சாத்தியமாகப் போகின்றது.

சிங்கள உளவியலைப் பொறுத்தவரை அவர்கள் 1956 இல் மூர்க்கமாக எதிர்த்த தமிழ் உரிமையை படிமுறையில் படிப்படியாக வழங்கியுள்ளார்கள். இன்று வடகிழக்கில் மட்டுமல்ல ஏனைய பகுதிகளிலும் தமிழ் ஆழ வேரூன்றிக் கொண்டிருக்கிறது. இதுவொன்றே நாம் சிங்களவர்களுடன் எப்படியான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை எமக்கு அறிவுறுத்துகின்றது.

இதுவரை தோற்றுப் போன பாதையில் ஒடித் தோற்றுப் போவதைவிட, புதிய பாதையில் முயற்சிப்பதே விவேகமான செயல். அந்த இராசதந்திரத்தைப் புரிந்துகொள்ள முடியாதவர்களைப் பற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. தமிழ் மக்கள் விவேகிகள். அவர்கள் புரிந்து கொள்வர்.

வான இலக்கத் தகடுகளின் சிங்களச் சிறீ எழுத்தை ஆவேசமாக எதிர்த்தெழுந்த, எதிர்ப்பு அரசியலை உயிர்நாடியாகக் கொண்டு அரசியல்பணி மேற்கொண்ட அமிர்தலிங்கம் அவர்களே பிற்காலத்தில் சிங்கள உளவியலை உணர்ந்து படிமுறையில் முன்னேற, சார்பு அரசியலை அரவணைத்து மாவட்ட சபையை வரவேற்றார்.

சிங்களவர்களிடம் ஒரே தடவையில் ஒட்டு மொத்தமாய்ப் பெறமுடியாது. சில்லறையாகத்தான் சேகரிக்க வேண்டும். அந்த அடிப்படையிலேயே தந்தை செல்வாகூட பண்டாரநாயக்கவோடு ஒப்பந்தம் செய்தார். டட்லி அரசில், கட்சிக்கு அமைச்சர் பதவி ஏற்றார். மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சரானார். யாழ்ப்பாணத்தில் வாதரவத்தை உட்பட சில கிராமங்களுக்கு நன்னீர் வசதி ஏற்படுத்தினார்.

தமிழ் அரசுக் கட்சி வரலாற்றில் இன்னும் பல ஆதாரங்கள் உண்டு. அதனைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் கூச்சலை உதவாக் குப்பையாக ஒதுக்கிவிடுங்கள்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதி சிறிசேன-பிரதமர் விக்கிரமசிங்கா வழங்கும் அரிய வாய்ப்பை வீணடிக்காமல், நீங்கள் அரசோடு சார்புநிலைப் போக்கைக் கடைப்பிடிப்பதையும், சுதந்திரதின விழாவில் கலந்து கொண்டதையும் சாணக்கியமிக்க இராசதந்திரம் என்று ஏற்றுக்கொள்வதோடு அதற்காக உங்களை மெச்சி வரவேற்று வாழ்த்துகிறேன்.

- கதிர் பாலசுந்தரம்

# சினிமா சினிமா

❖ நெப்போலியனுக்கு ஜோடியாக சில படங்களில் நடித்தவர் குஷ்பு. ஆனால், தற்போது இருவரும் அரசியல்வாதிகள். அதாவது, தி.மு.க.வில் இருந்து விலகி காங்கிரசில் இணைந்திருக்கும் குஷ்பு, பா.ஜ.கவை பற்றிய அவதூறுகளை அள்ளி வீசி வருகிறார். தி.மு.க.வில் இருந்து விலகி, பா.ஜ.க. வில் இணைந்திருக்கும் நெப்போலியன், காங்கிரசைத் தாக்கி வருகிறார். அதனால், ஒரே இடத்தில் இருந்து வந்த நெப்போலியன், குஷ்புவுக்கிடையே இப்போது அறிக்கைப் போர் தொடங்கியிருக்கிறது.

❖ அவன் இவன் படத்தில், ஏற்கனவே விஷால் - ஆர்யா இருவரும் இணைந்து நடித்தனர். ஆனால், அப்படம் ஓடவில்லை. பாண்டியநாடு படத்தை அடுத்து, மீண்டும் விஷாலை இயக்கவிருக்கும் சுசீந்திரன், அப்படத்தில் ஆர்யாவை, "கெஸ்ட்" ரோலில் நடிக்குமாறு கேட்டிருக்கிறார். ஆனால், விஷால் குறுக்கிட்டு, "கெஸ்ட் ரோல் வேண்டாம் ஒரு நல்ல கதாபாத்திரத்தில் நடிக்க வைக்கலாம்..." என்று கூற, இப்போது இரண்டு கதாநாயகன் போன்று, அந்த கதையை மாற்றிக் கொண்டிருக்கிறார் சுசீந்திரன்.



❖ தன்னுடைய வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும் பல ஆண்டுகளாக பணியாற்றி வந்த 20 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு தனது சொந்த செலவில் வீடு கட்டிக் கொடுத்து குடியமர்த்தினார் அஜித். ஊழியர்களின் பிள்ளைகளின் கல்விச் செலவையும் ஏற்று அவர்களை படிக்க வைத்து வருகிறார். அஜித்தின் இந்தப் பாணியை பின்பற்றி ஊழியர்களின் நலனைப் பாதுகாக்க உள்ளார் அனுஷ்கா. சினிமாவில் அறிமுகமான நாளிலிருந்து இப்போது வரை தன்னுடைய வளர்ச்சிக்குத் துணையாக இருந்து வரும் ஊழியர்களுக்கு வீடு கட்டித் தரவிருக்கிறார்.

❖ வேட்டை மற்றும் அஞ்சான் படங்களின் தோல்வியால் சரிவை சந்தித்த லிங்குசாமி, அடுத்தபடியாக தன் வெற்றிப்படங்களான சண்டக்கோழி படத்தில் நடித்த விஷால், பையா படத்தில் நடித்த கார்த்தி ஆகியோரை வைத்து, இந்த ஆண்டில் இரண்டு படங்களை இயக்க திட்டமிட்டுள்ளார்.

❖ விஜயகாந்த் மகன் சண்முகப்பாண்டியன் நடித்து வரும் படம், சகாப்தம். இந்தப் படத்தில் விஜயகாந்தும், ஒரு பாத்திரத்தில் நடிக்கிறார். அதோடு, அப்படத்தின் பாடல்கள் உரிமையை 42 இலட்சத்துக்கு, விற்பனை செய்துள்ளனர். முதன் முறையாக ஒரு புதுமுக நடிகரின் படப்பாடல்கள் அதிக விலைக்குப் போயிருக்கிறது.

❖ இதுவரை புதுமுகங்களை வைத்து மட்டுமே படங்களை இயக்கி வந்த பிரபுசாலமன், தனது அடுத்த படத்துக்காக தனுஷிடம் பேசி உள்ளார். சாலமன் சொன்ன கதை தனுஷுக்குப் பிடித்து விட்டது. "ஷமிதாப்", "அனேகன்" பாலாஜி மோகன் இயக்கத்தில் முடியவிருக்கும் படமான "மாரி"யைத் தொடர்ந்து தனுஷின் அடுத்த படமாக பிரபுசாலமன் படம் இருக்கும்.

❖ "லொடுக்கு பாண்டி", "நந்தா" படத்தில் கருணாஸ் ஏற்று நடித்திருந்த கதாபாத்திரம். அந்த கதாபாத்திரத்தின் பெயரே கருணாஸின் புதிய படத்துக்கு தலைப்பாக வைக்கப்பட்டுள்ளது. கருணாஸ் ஜோடியாக நேகா சக்சேனா நடிக்கிறார்.








❖ எம்.ஜி.ஆரின் ரசிகரான, இயக்குநர் சுந்தர்.சி, உலகம் சுற்றும் வாலிபன் படத்தை, இன்றைய காலகட்டத்துக்கு ஏற்ப, ரீமேக் செய்ய முடிவு செய்திருக்கிறார். விஷாலை, ஹீரோவாக ஒப்பந்தம் செய்துள்ளார்.

❖ கோடம்பாக்கத்தின் காஸனோவா-வாக பார்க்கப்படும் ஆர்யா தற்போது சுற்றிவருவது தமன்னாவுடன். அதனால் பழைய தோழியான் நயன்தாரா இவருடன் தற்போது காணப்படுவதில்லை.

❖ இதுவரை சென்னையிலேயே முகாமிட்டிருந்த ப்ரியா ஆனந்துக்கு, தற்போது பட வாய்ப்புகள் குறைந்து வருவதால், தன் பெற்றோர் இருக்கும் லண்டனுக்கு அடிக்கடி பறந்து விடுகிறார்

❖ கவர்ச்சிப் புயலாக அறியப்பட்ட சன்னி லியோன், தற்போது, லீலா என்ற ஹிந்திப் படத்தில் முதன்முறையாக குடும்பப் பாங்கான வேடத்தில், பரத நாட்டியக் கலைஞராக நடிக்கிறார்.

❖ தனுஷுடன் நடித்து வரும், மாரி படத்தில் தமன்னாவை மிஞ்சும் கவர்ச்சி உடையணிந்து நடிக்கிறார் காஜல் அகர்வால்.

❖ ட்ராபிக் படத்துக்குப் பின், தற்போது, மம்மூட்டியுடன் மீண்டும் ஒரு மலையாளப் படத்தில் நடித்து வருகிறார் நயன்தாரா.

❖ நயன்தாராவை விட, தனக்கு சிறிய கதாபாத்திரம் கொடுத்ததால் தான், மாஸ் படத்தில் இருந்து, விலகியதாக அறிவித்துள்ளார் எமி ஜாக்சன்.

❖ ஜெயம் ரவியுடன் நடிக்கும், அப்பாடக்கர் படத்தையடுத்து, விமலுடன், மாப்பிள்ளை சிங்கம் என்ற படத்தில் நடிக்கிறார் அஞ்சலி.

❖ விஜய்யின், காவலன் படத்தில் இரண்டாவது நாயகியாக நடித்த மலையாள நடிகை மித்ரா, வில்லியம் பிரான்சிஸ் என்ற இசையமைப்பாளரை திருமணம் செய்ய விருக்கிறார்.

❖ ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி, தன் குழந்தைக்கு "மலாலா" என்று பெயர் வைத்துள்ளார். அப்பெயரே தன் குழந்தைக்கு கல்வியையும், வீரத்தையும் தரும் என்கிறார்.



❖ தெலுங்கில் சிவரஞ்சனியாகவும் மலையாளத்தில் கௌரியாகவும் நடித்து வருகிறார் ஒரு குணச்சித்திர நடிகை. தமிழில் தனது இயற்பெயரான வடிவுக்கரசி என்று நடித்து வருகிறவர்தான் அவர்.

# கல்வித்துறை வளர்ச்சிக்கு என்றும் சளைக்காத சேவை

## பிரமந்தனாறு பாடசாலை அதிபர் தெரிவிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறையில் முன்னேற்றகரமான மாற்றத்தை எற்படுத்தி தொடர்ச்சியாக கல்வி அபிவிருத்தியில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருபவர் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திகுமார் என கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலய அதிபர் கென்ரி அன்ரன் மரியதாஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தனது பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியின மூலம் பிரமந்தனாறு பாடசாலைக்கு மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு கணனித்தொகுதிகள் மற்றும் பல் ஊடக தெறிகருவி என்பவற்றைவழங்கிவைக்கும் நிகழ்வில் தலைமை தாங்கிகருத்துத்தெரிவிக்கும் போதேஅவர் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அங்குஅவர் மேலும் தெரிவிககையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள எங்கள் பாடசாலையின் தேவைகளை பூர்த்தி செய்வதில் அவரின் முயற்சியே பெரிதும் உதவியிருக்கிறது. ஆசிரியர்களுக்கான விடுதிகள் அமைத்தல் முதல் வகுப்பறைக் கட்டடங்கள் எங்கள் பாடசாலைக்கு நகர்த்தியது வரை நாடாளுமன்ற உறுப்பினர் மீள் குடியேற்றத்திற்கு பின்னர் அதிக அக்கறையுடன் செயற்படுகின்றார். எங்களது கிராம மாணவர்கள் மகிழ்ச்சியுடன் அழகான வகுப்பறைக் கட்டடங்களில் இருந்து கல்வி கற்பதற்கு வழி வகுத்தவர் நாடாளுமன்ற உறுப்பினரே எனவே மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விச் சமூகம் சார்பாக அவருக்கு எங்களது நன் றிகளை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

எங்களது கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு இரண்டு கணனித் தொகுதிகள் மற்றும் பல்லூடக தெறிகருவி என்பவற்றை வழங்கி வைத்துள்ளார்.இதனையிட்டு நாம் பெருமை அடைகின்றோம் எனக் குறிப்பிட்ட பாடசலை அதிபர் கடந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக எட்டு மாணவர்கள் சித்தியடைந்தமையும்,34 மாணவர்களில் 31 மாணவர்கள் நூறு புள்ளிக்கு மேல் பெற்றமையும் ஒரு வரலாற்று நிகழ்வாகவே பார்க்கின்றோம். இதற்குக் காரணமாக எங்கள் மாணவர்களுக்கு தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக்குழுவின் ஊடாக நடாத்தப்பட்ட பரீட்சைகளும், கருத்தரங்குகளுமே முக்கியமாக அமைந்தன. எனவும் தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதிதலைவருமான முருகேசு சந்திரகுமார்பிரமந்தனாறு பாடசாலைக்கு இரண்டு கணனித்தொகுதிகள் மற்றும் பல்லூடக தெறிகருவி என்பவற்றை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் கடந்த ஐந்து வருடங்களில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்சசியாக நிலவிவரும் ஆசிரியர் வளப்பற்றாக்குறை ஒரு சவால் நிறைந்த விடயமாக எம் முன் காணப்படுகிறது. எனவும் தெரிவித்தார்.

## பதிவு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் யுத்தத்தால் உயிரிழந்த போராளிகளின் குடும்ப விபரங்கள், தடுப்புக் காவலில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்கள், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு குடும்பங்களுடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் விபரங்கள் என்பன திரட்டப்பட்டு வருகிறது.

இந்த விபரங்களைப் பதியும் படிவங்களை பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள கிராம அபிவிருத்தி அலுவலர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

படிவங்களை உரியவர்கள் பூரணப் படுத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்திடம், அல்லது மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திடம் உறுதிப்படுத்தி உடனடியாக ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(90)

## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

வவுனியா அரசங்குளம், அரசமுறிப்பு, விளாத்திக்குளம், வேப்பங்குளம், ஓமந்தை ஆகிய கிராமங்களில் வறுமைக்கோட்டுக்குள் வாழும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பிரான்ஸ் ரி.ஆர்.ரி வானொலி நேயர்களின் நிதி பங்களிப்புடன் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

அரசமுறிப்பு கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் துரைராஜா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதில் கிராமங்களின் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வுக்கான ஒழுங்கமைப்புகளை நொச்சிக்குளம் சிறீசித்தி விநாயகர் ஆலய செயலாளர் குமாரசாமி இராஜேந்திரகுமார மேற்கொண்டிருந்தார். (160)

## கடற்பாசி வளர்ப்புத்திட்டம் 50 பயனாளிகளுக்கு உதவி



கிளிநொச்சி பூநகரி இரணைமாதாநகரில் கடற்பாசி வளர்ப்புத் திட்டத்திற்காக 50 பேருக்கு தலா ரூபா 50000 வழங்கப்பட்டுள்ளதாக பூநகரிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

பூநகரியில் கடற்பாசித் திட்டத்தினை அபிவிருத்தி செய்வதன் ஊடாக பல குடும்பங்கள் வாழ்வாதாரத்தில் உயர்ந்துகொள்வதற்கான வழியேற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதே வேளை 1990ஆம் ஆண்டு இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு முழங்காவிலில் இரணைமாதாநகர் கிராமம் உருவாக்கப்பட்டதென்பதும் தற்போது 300இற்கும் மேற்பட்ட குடும்பங் கள் வாழ்ந்துவருகின்றனர்.

இரணைதீவில் தங்களை மீள்குடியேற்றம் செய்யுமாறு இக் குடும்பங்கள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (160)

## கொலை வழக்கில் கைதான இளைஞர் பிணையில் விடுதலை

இருபாலை கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் யாழ் மேல் நீதிமன்றத்தினால் கடந்த புதன் கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் தெற்கு இருபாலையை சேர்ந்த செல்லததுரை சதீஸ்வரன் என்பவர் இருபாலையை சேர்ந்த குலரத்தினம் என்பவரைக் கடந்த 05.08.2014 இல் கொலை செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சந்தேக நபர் தேடப்பட்டு வந்த நிலையில் கடந்த 14.08.2014இல் இவர் கோப்பாய் பொலிஸாரிடம் சரணடைந்தார். யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இவர் ஆஜர் படுத்தப்பட்டபோது 15.08.2014 இல இவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

இவரது சட்டத்தரணி மூலம் இவருக்கான பிணை மனு யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதனை கடந்த வியாழக்கிழமை விசாரணை செய்த நீதிபதி சந்தேக நபரைப் பிணையில் செல்வதற்கு உத்தர விட்டார்

30 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் இவரை விடுவிப்பதற்கு நீதிவான் அனுமதியளித்தார்

பிணை நிற்பவர்கள் பிணைத் தொகைக்குத் தகுதியானவர்கள் தானா என்பதையும், அவர்களின் இருப்பிடத்தையும் அவர்கள் பகுதிக் கிராம அலுவலர் உறுதிப்படுத்தல் வேண்டும் எனவும் பணிக்கபபட்டது. அத்துடன், நாட்டைவிட்டு அவர் வெளியேறுவதைத் தடைசெய்யும் வகையில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கும் அறிவிப்பதோடு, ஒவ்வொரு மாதக்கடைசியிலும் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் கோப்பாய் பொலிஸில் கையொப்பமிட வேண்டும் எனவும் கட்டளையிடப்பட்டது.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆஜரானார். (137)

## ஜோதிலிங்க தரிசனம்

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள 12 திருத்தலங்களைச்சேர்ந்த ஜோதிலிங்கங்களை ஒரேயிடத்தில் அடியார்கள் தரிசிக்கும் வகையில் திருகோணமலை விசாலாட்சி அம்பாள் ஆலயத்தில் விசேடநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் 12 ஜோதிலிங்கங்களையும் அடியார்கள் தரிசிக்க முடியும் இன்று முதல் எதிர்வரும் 19ஆம் திகதிவரை இடம் பெறும். இதில் ஜோதிலிங்கதரிசனம், ஆத்மா,மகாத்மா, உலக நாடகம் பற்றி கண்காட்சி மன சாந்தி அளிக்கும் யாககுண்டம், தியான அனுபவம் என்பன இடம் பெறவுள்ளன.

## முரசின் இன்றைய பலன்

(15.02.2015 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் மாசி மாதம் 03 ஆம் திகதி.

ரேவதி பி.இ. 1.38 - அமிர்தசித்தம் சதுர்த்தி மு.இரவு 9.36 வரை

இராகுகாலம் 5.01-6.31 வரை சுபநேரம் 9.31-11.01 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
கணக்குப்பதிவில் சந்தேகம் ஏற்பட்டதால் வாழ்க்கையை முறித்துக் கொள்ளல்.

**ரிஷபம்**
அனுபவமில்லாத தொழிலில் ஈடுபட முயன்றதால் பாரிய நஷ்டம் ஏற்படமுன் கைவிடல்.

**மிதுனம்**
நோய்குணமடையாத நிலையில் தெய்வதலமொன்றுக்கு விஜயஞ்செய்ய ஆயத்தமாதல்.

**கடகம்**
பாதுகாப்பில் கூடிய கவனமெடுத்ததனால் திருட்டு முயற்சி பலிக்காது விடல்.

**சிம்மம்**
நீண்டகாலத்திற்குப் பின்னர் பிளைகள் வந்ததால் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதத்தல்.

**கன்னி**
"வாஸ்து" ஜோதிடமுறைப்படி புதிய மனை அமைக்க ஏற்ற இடத்தைத் தெரிவு செய்ய ஜோதிடரை நாடுதல்.

**துலாம்**
தேங்கிய பொருட்களை விற்பனை செய்ய புதிய யுக்தியைக் கையாள சக ஊழியர்களுடன் ஆலோசனைமேற்கொள்ளல்.

**விருச்சிகம்**
பழைய ஒப்பந்த வேலைகள் திருப்திகரமாக அமைந்திருந்தமையினால் புதியதில் கைச்சாத்திடல்.

**தனுசு**
ஏழரைச்சனி ஆரம்பித்தபடியினால் தொழிலில் போதிய கவனமெடுத்து நடாத்த முற்படல்.

**மகரம்**
பணப்பிரச்சினையால் உறவு கெட்டிருந்த மாமனாருடன் சகஜநிலை ஏற்படல்.

**கும்பம்**
கௌரவப்பதவி பெற விண்ணப்பித்தலும் பிரமுகரின் தயவை நாடமுற்படலும்.

**மீனம்**
அட்டமத்துச்சனி விலகியதால் பூட்டியிருந்த விற்பனை நிலையத்தைத்திறக்கும் முயற்சியில் ஈடுபடல்.

# கடற்படையின் சோதனை நடவடிக்கை

## விசனமடையும் மன்னார் மீனவர்கள்

(மன்னார்)

மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள கடற்கரையோரத்தில் அமைந்துள்ள கடற்படையினரின் சோதனைச்சாவடியில் மீண்டும் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் படகுகள் கடற்படையினரினால் சோதனைக்கு உடபடுத்தப்படுவதாகவும்,மீனவர்களின் விபரங்கள் பதிவு செய்யப்படுவதாகவும் மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் நீண்டநேரம் தாமதித்த பின்பே தொழிலுக்குச் செல்லும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் விபரங்கள் பதியப்பட்டு படகுகள் கடுமையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலே மீனவர்கள் தொழிலுக்குச் சென்று வந்தனர்.

ஜனாதிபதித்தேர்தல் அறிவிக்கப்பட்டு சில வாரங்களுக்கு பின் கடற்படையினரின் கெடுபிடிகள் குறைந்த நிலையில் மீனவர்கள் பிரச்சினைகள் இன்றி தொழிலுக்குச் சென்று வந்தனர்.

தேர்தல் முடிவடைந்த நிலையில் மீண்டும் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் விபரங்களை பதிவு செய்யும் நடைமுறை சிறிது சிறிதாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது பழைய நடைமுறைக்கு வந்துள்ளது.

தற்போது மன்னார் பிரதான பாலத்தடியூடாக தொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் படகுகள் பாலத்தடியில் உள்ள கடற்படையினரின் சோதனைச்சாவடியில் சோதனைகளுக்குட்படுத்தப்பட்டு மீனவர்களின் விபரங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

அப்பகுதியில் இருந்து ஆத்துவாய்ப்பகுதியூடாக தென் கடலுக்குச் செல்லும் மீனவர்களின் படகுகள் ஆத்துவாய்ப்பகுதியில் கடற்படையினரினால் மறிக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் தென்கடல் பகுதிக்கு தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

கடற்கரையில் இருந்து தொழிலுக்குச் செல்லும் போதும், தொழில் முடிவடைந்த பின் கரை வரும் போதும் குறித்த சோதனைகள் இடம் பெறுகின்றன.

இதனால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதோடு மீன்களை உரிய நேரத்திற்கு சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமின்றி கரை திரும்பும் போது மீனவர்களின் படகுகளில் இருந்து கடமையில் உள்ள கடற்படையினர் மீன் மற்றும் கடல் உணவுகளை தமது தேவைக்கு ஏற்ற வகையில் பலவந்தமாக எடுப்பதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே மீன்பிடி அமைச்சர் மற்றும் ஜனாதிபதி இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி மன்னார் மாவட்ட மீனவர்கள் எவ்வித தடைகளும் இன்றி கடற்றொழிலில் ஈடுபட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பூச்சாடிகள் அகற்றப்பட்ட இடம் சீர்செய்யப்படவில்லை

## விசனமடையும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மணிக்கூட்டு கோபுர வீதியின் நடுவே அமைக்கப்பட்ட பூச்சாடிகள் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டு அகற்றப்பட்ட நிலையில் அப்பகுதி உரிய வகையில் சீர்செய்யப்படாமையால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.



முன்னர் வீதியை அழகுபடுத்த மாநகர சபையால் அமைகபட்ட இப பூச்சாடிகளும் கட்டுக்களும் தற்போது இடிக்கப்பட்டுள்ள நிலையில் அதை இடித்தவர்கள் அப்பகுதியில் உள்ள மண்ணை அகற்றாமையால் வாகனங்கள் செல்லும் போது பெரும் புகை மண்டலமாகவே காட்சியளிப்பதுடன் எவரும் செல்ல முடியாத அளவுக்கு தூசுகள் காற்றில் பறப்பதால் மோட்டார் சைக்கிள், சைக்கிள் நடந்து செலவோர் பெரும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுப்பது மட்டுமல்லாமல் விபத்துக்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே இதனை இடித்தவர்கள் அதனை சரியான முறையில் துப்புரவு செய்யவேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# முன்பள்ளிக்கட்டடம் திறந்து வைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி கௌதாரி முனையில் முன்பள்ளியொன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் ரூபா.2500000 நிதிப்பங்களிப்புடன் இம்முன்பள்ளி உருவாக்கப்பட்டுள்ளது.104 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் இம்முன்பள்ளி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் மற்றும் சுவிஸ அபிவிருத்தி நிறுவன அதிகாரிகள் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (160)

# பதிவிறக்கப் பெட்டகம்

தெருவில்போகும் ஓர் அழகான பெண்ணைப்பார்த்த இளைஞன் அவளிடம் சென்று, "நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய். உன்னையே கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்றான்.

அதற்கு அந்தப் பெண், "கொஞ்சம் பொறு. பின்னால் என் தங்கை வருகிறாள். என்னைவிட அழகாக இருப்பாள். அவளையும் ஒருமுறை பார்த்துவிட்டு உன் முடிவைச் சொல்" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள்.

இளைஞன் நீண்ட நேரம் காத்திருந்தான். தங்கை வரவில்லை. ஏமாற்றத்துடன் சென்றான். அந்த அழகான பெண்ணையும் நீண்ட நாட்களாகப் பார்க்க முடியவில்லை. ஒரு நாள் எதிர்பாராதவிதமாக அவளைப் பார்த்தான். "நீ உன் அழகான தங்கை வருவதாகச் சொல்லிவிட்டு என்னை ஏமாற்றிவிட்டாயே?" என்று வருத்தப்பட்டான்

"உனக்குத் தேவை அழகான பெண். அதற்காகத்தான் நான் சொன்னதை நம்பிக் காத்திருந்தாய். என்னைக் கல்யாணம் செய்து கொண்ட பிறகு, வேறோர் அழகான பெண்ணைப் பார்த்ததும் என்னை விட்டுவிட்டு அவளுடன் செல்லமாட்டாய் என்பது என்ன நிச்சயம்?" என்றாள் அவள்.

*** *** *** ***

பிரபல ஹங்கேரி நாடக ஆசிரியர் ஃபுரெங்மோல்னார் அளவு கடந்த கோப்பி பிரியர். முதல் உலகப் போர் முடிந்திருந்த சமயத்தில் புடாபெஸ்ட் நகரிலிருந்தார். ஒரு உணவகத்தில் கோப்பி குடித்துக் கொண்டிருந்தவர், திடீரென இரண்டாவது உறிஞ்சலில் கோப்பையை மேசையில் வைத்துவிட்டு அருகிலிருந்த நண்பரிடம் கோப்பியைக் காட்டிப் பேசினார்.

"இந்தக் கோப்பியில் ஒரு நல்ல விஷயம், ஒரு கெட்ட விஷயம், ஒரு மர்மம் அடங்கியுள்ளது"

"சொல்லுங்கள், என்ன அவை?" என்றார் நண்பர்.

"ஒரு நல்ல விஷயம் – இதில் சிக்கரி கலக்கப்படவில்லை. ஒரு கெட்ட விஷயம் – இதில் கோப்பித்தூளே இல்லை"

"அது சரி, "மர்மம்' என்றீர்களே, அது என்ன?"

"அதுவா? இரண்டுமே இல்லாமல் பின் எப்படி? இது கறுப்பாக இருக்கிறது என்பதுதான்!."

*** *** *** ***

இந்தியாவில் ஆங்கிலேயர்கள், முதன்முதலில் ரயில் சேவையை ஆரம்பித்திருந்த காலம். ஒரு பண்ணையார், முதன்முதலாக பக்கத்து நகருக்கு மாட்டு வண்டியில் போய்விட்டு, திரும்பி வரும் போது ரயிலில் பயணம் செய்து பார்க்கலாமே என்று ஏறிப் பயணித்தார்.

பண்ணையாருக்கு வெற்றிலை போடும் பழக்கம் உண்டு. வெற்றிலை போட்டுக் குதப்பி, இரண்டு விரல்களை உதட்டின் குறுக்கே வைத்து, 'சர்'ரென்று வெற்றிலை எச்சிலை ஜன்னல் பக்கமாகத் துப்பினார்.

ஜன்னலில் கண்ணாடி உண்டு... அது, இறக்கப்பட்டிருப்பது பற்றி அவருக்கு தெரியவில்லை; முதல் பயணமாயிற்றே... எச்சில் அதில் பட்டு, எதிரே இருந்தவர் முகமெல்லாம் தெறித்தது. ஒருவன், பண்ணையாரை ஓங்கி அறைந்து விட்டான்.

கிராமத்துக்கு வந்த பண்ணையாரிடம், 'ரயில் பயணம் எப்படி?' என்று கேட்டனர் அவ்வூர் மக்கள். 'நன்றாகத்தான் இருந்தது... ஆனால், வெற்றிலை எச்சிலைத் துப்பினால் மட்டும் திருப்பித் துப்பி அடிக்கின்றனர்...' என்றார் பண்ணையார்.

*** *** *** ***

இரு குடிகாரர்கள் நண்பர்களாக இருந்தார்கள். அதில் ஒரு குடிகாரர் திடீரென்று இறந்துவிட்டார். அதைக் கேள்விப்பட்ட இன்னொரு குடிகாரர் இறந்தவரைப் பார்க்க மிகுந்த துயரத்துடன் சென்றார். அங்கிருந்த அவர்கள் அவரைப் பயமுறுத்த நினைத்தார்கள்.

"உங்கள் நண்பர் அதிகமாகக் குடித்ததால் ரத்தமெல்லாம் அல்கஹோலாய் மாறிவிட்டது. மெழுகுவர்த்தியை அவர் ஊதி அணைக்கும்போது அவர் ஊதிய காற்றில் தீப்பற்றி அது அவருடைய வாய்க்குள் சென்று வெடித்துச் செத்தார். இனிமேலாவது நீங்கள் குடிக்காமல் இருங்கள்" என்றனர்.

அதற்கு அவர், "நான் என் நண்பரைப் போல நிச்சயம் சாக மாட்டேன் என்று சத்தியம் செய்கிறேன்" என்றார் உறுதியாக. அங்கேயிருந்தவர்கள் மகிழ்ச்சியுடன் அவரைப் பார்த்தனர்.

அவர் சொன்னார்: "இனிமேல் மெழுகுவர்த்தியை மட்டும் அல்ல, எந்த நெருப்பையும் நான் ஊதி அணைக்க மாட்டேன்"

# அசாத்சாலியுடன் முறுகல்

# கடும் சீற்றத்தில் ஞானசார தேரர்



(கொழும்பு)

முஸ்லிம் அரசியல்வாதியான அசாத் சாலி, பொதுபலசேனா குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்களை அவ்வமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே வன்மையாக கண்டித்துள்ளார்.

மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி, இலங்கை முஸ்லிம்களை சர்வதேச பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தி ஞானசார தேரர் மற்றும் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே ஆகியோர் வெளியிட்டிருந்த கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இதற்கு மறுப்பளித்து பொதுபலசேனா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவ்வமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே இவ்வாறு கண்டித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

நான் வெளியிடாத ஒரு கருத்தை, முஸ்லிம்கள் மத்தியில் இன வாதம் மற்றும் மத வாதம் என்பவற்றைத் தூண்டி மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்து வரும் அரசியல்வாதியான அசாத் சாலி தெரிவித்துள்ளார். இவரது கருத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தொடர்ந்தும் பொய்யான அறிக்கை விட்டு இவர் மக்கள் மத்தியில் பிரபலம் அடைந்து வருகின்றார். நான் சொல்லாத ஒரு செய்தியைக் கூறியதாக கூறி பௌத்த, முஸ்லிம் மக்கள் மத்தியில் இன வாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி, எதிர்வரும் தேர்தலில் வாக்குச் சேகரிப்பில் ஈடுபடும் வெட்கம் கெட்ட ஒரு முயற்சியாகவே இதனை சாதாரண அறிவுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் புரிந்து கொள்வார். குறித்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது மத ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவித அறிவித்தலும் எம்மால் விடுக்கப்படவில்லை. மூளையுள்ள எவரும் இது தொடர்பில் பரிசீலனை செய்து பார்த்துக் கொள்ள முடியும. பொலிஸோ அல்லது தேவையான எவரோ இது குறித்து பார்த்து அறிந்து கொள்ள முடியும்.

சிங்கள பௌத்த மக்களின் பாதுகாப்பு, இருப்பு தொடர்பிலும் குறிப்பாக, மதவாதம் மற்றும் இனவாத பயங்கரவாதத்திலிருந்து எமது தாய் நாட்டைக் காப்பதற்குத் தேவையான எந்தவொரு நீதியான போராட்டமொன்றையும் முன்னெடுக்க நாம் பயப்பட மாட்டோம் எனவும் அந்த அறிக்கையில் பொதுபலசேனாவின் நிறைவேற்று அதிகாரி கூறியுள்ளார்.

# கைத்தொழில் உற்பத்திக்கு ஜப்பானிய தொழில்நுட்பம்

## ஜப்பான் தூதுவர் உறுதி

(கொழும்பு)

இலங்கையில் சிறு தொழில் நுட்ப உற்பத்திகள் தொடர்பில் தொழில்நுட்ப உதவிகளை ஜப்பான் வழங்கவுள்ளதாக இலங்கைக்கான ஜப்பான் நாட்டுத் தூதுவர் நொபிஹிட்டோ ஹேயோ கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீனிடத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தில் மீண்டும் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சராக கடமைகளை பொறுப்பேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீனுக்கு ஜப்பான் நாட்டின் சார்பில் நன்றி தெரிவிப்பதுடன், எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடும் வகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஏற்றுமதி அபி விருத்தி அதிகார சபையின் தலைவர் பந்துல எகொடகே, ஜப்பான் பிரதி தூதுவர்அசோகோ ஒகாய், வர்த்தக திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆர்.டி.எஸ்.குமாரரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் றிசாட் பதியுதீன் புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள், நாட்டின் முதலீடுகள் தொடர்பிலும், தற்போது இலங்கைக்கு ஜப்பான் அரசாங்கம் வழங்கும் அபிவிருத்தி தொடர்பிலான ஒத்துழைப்புக்கள் தொடர்பிலும் தமது நன்றிகளை இங்கு தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கை பல்வேறு வகையான பொருட்களை ஏற்றுமதி செய்வதாகத் தெரிவித்த அமைச்சர் றிசாட் பதியுதீன் எதிர்காலத்தில் இன்னும் நெருக்கமான உறவுடன் இலங்கை, ஜப்பானுடன் செயற்படவுள்ளதாகவும் கூறினார்.

அதேவேளை இலங்கையின் தெங்கு உற்பத்திகளுக்கு ஜப்பான் சந்தையில் அதிகமான கிராக்கி காணப்படுவதாகவும், இலங்கையில் இருந்து தேங்காய் எண்ணெய், தேங்காய் துருவல் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை ஜப்பான் இறக்குமதி செய்வதாகவும் ஜப்பானியத் தூதுவர் இதன் போது தெரிவித்தார்.

நவீன உலகின் வேகத்திற்கு ஏற்ப தொழில் நுட்ப வளர்ச்சியினை இலங்கைக்கு அறிமுகம் செய்ய ஆவலாக ஜப்பான் உள்ளதாகவும், இது தொடர்பில் தமது அமைச்சின் உயர்மட்டக் குழுக்களுடன் பேச்சுக்களை நடாத்த தயாராகவுள்ளதாக ஜப்பானியத் தூதுவர் கூறினார்.

இது தொடர்பில் தாம் நன்றி தெரிவிப்பதாகவும், இவ்வாறான மத்திய தர கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பில் தாம் அதிக ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் றிசாட் பதியுதீன் இதன் போது குறிப்பிட்டார்.

# மைத்திரி இன்று டில்லிக்கு விரைகிறார்



(கொழும்பு)

இந்தியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தூதுக்குழுவினரை வரவேற்க இந்திய அரசும் மக்களும் ஆவலுடன் காத்திருப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். இலங்கையின் புதிய ஜனாதிபதியை கோலாகலமாக வரவேற்பதற்கு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்த இந்தியப் பிரதமர், மைத்திரிபால சிறிசேனவின் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் இந்திய - இலங்கை நல்லுறவுக்கு புதிய அணுகுமுறையாக அமையுமெனவும் குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் காலை ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணப் போட்டியில் கலந்துகொள்கின்ற இலங்கை கிரிக்கெட் அணிக்கு தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்ட இந்தியப் பிரதமர், 1996 ஆம் ஆண்டு போன்று இம்முறையும் இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்வதற்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத் தின்போது ஜனாதிபதிமைத்திரி பால இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியையும் சந்திப்பார்.

அத்துடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இருதரப்பு பேச்சுக்களில் ஈடுபடுவார். மேலும், ஜனாதிபதி அரசியல் கட்சித் தலைவர்களையும் ஏனைய பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய விஜயத்தின் போது புத்தகயா விகாரைக்கும் திருப்பதிக்கும் சென்று தரிசனம் மேற்கொள்வார். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவியை ஏற்றதன் பின்னர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவாகும்.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# வடக்கு மாகாண தவிசாளர்களே சபைத் திட்டங்கள் கையில் உள்ளதா?

## அமைச்சர் கருஜெயசூரியா உங்களை நாளை சந்திக்கவுள்ளார்

இன்னும் சில மாதங்களில் வடக்கில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படவுள்ளன.

மேலும் சில மாதங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய பொதுத்தேர்தலுக்கு அரசு தயாராகிறது.

நல்லாட்சித் தத்துவங்களைக் கொண்டவரும் தமிழ் மக்களின் ஏகோபித்த வாக்குகளைப் பெற்று இன்று ஜனாதிபதியாக இருப்பவருமான மைத்திரி பால சிறிசேன தலைமையிலான ஆட்சி ஆரம்பித்து இன்று வீறு நடைபோடுகின்றது.

எனினும் வடக்கில் மீள்குடியமர்வு, கைதிகள் விடுதலை, காணிவிடுவிப்பு, ஊனமுற்றோர் மறுவாழ்வு, சொத்திழந்தவர், வீடழிந்தவர்களுக்கு வீடு என்பன ஒருபுறம் பெரிதாக பேசப்பட்ட விடயங்கள் சிறிது சிறிதாக மங்கிச் செல்கின்றன.

தமிழ் மக்கள் தமக்கு பிரத்தியேகமாக கிடைக்கும் என எதிர்பார்த்த விடயங்கள் யாவும் மறுதலையாக மாறிவிட்ட தென உணர்ந்து வருகின்றனர்.

தம்மைத் தமிழின தலைவர்கள் எனச்சொல்லுபவர் இருவர், நல்லாட்சிக்கு நிச்சயம் மாறுதல் ஏற்படும் என்ற ரீதியில் 67 ஆவது சுதந்திரதின வைபவத்தில பங்கேற்றிருந்தனர்.

அதேநேரம் கிடைக்கவிருந்த இரு அமைச்சு பதவிகளையும் உட்கட்சி பூசல்களால் எதிர்கால நோக்கம், பேண்தகு நிலை எனக் கருதி அவற்றைப் பெறாது வெளியே நிற்கின்றனர்.

மேலும் 'இலங்கையில் நடந்தது இனப்படுகொலையே' என்ற வாசகம் பொருந்திய தீர்மானம் வடக்கு மாகாண சபையில் அரங்கேறியுமுள்ளது.

இங்கு நான் கூறவருவது யாதெனில் எமது தமிழினம் அழிந்து கொண்டு இருக்கின்றது. தொழில்வளம் இல்லை. மூலதன வளமில்லை, கைத்தொழில் பின்னடைவு, வேலை வாய்ப்பு இல்லை, உயர்தரமான வாழ்வாதாரம் என்பது மிக குறைவு, வறுமை அதிகரிப்பு இப்படி மொத்தத்தில் யாவுமே சமூக வலைப் பின்னல் நோக்கில் குறைவாக உள்ளன.

எனவே அனைத்து தமிழின மக்களும் ஒன்றிணைந்து வாழக்கூடிய சுபீட்சமான சூழல் ஒன்று உருவாக வேண்டும்.

நாளை (16.02.2015) வடக்கில் விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை கூட்டுவதற்காக யாழ். பொது நூலகத்திற்கு காலை 9.30 மணிக்கு அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள் ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சின் அமைச்சர் கருஜெயசூரியா வடக்கு உள்ளூராட்சி அமைச்சின் தலைவர், உபா தலைவர்களை அழைத்து பேசவுள்ளார்.

இதேநேரம் வடக்கின் உள்ளூராட்சி சபை செயலாளர்களை அழைக்காத நிலையில் கூட்டத்தை நடாத்தவுள்ளார்.

எனவே தவிசாளர்கள் நீங்கள் அரசியல் பேசாது. இதுவரை அடையப்படாத திட்டங்கள், அபிவிருத்திகள் குறித்தும், முன்னிலை அமைச்சுக்களால் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு கூடுதல் நிதி இதுவரை ஒதுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டுங்கள்.

இதனைவிட எதிர்காலத்தில் எமது கடந்த கால பின்னடைவினை முன்னெடுக்க, உட்கட்டுமான அபிவிருத்திக்கு (வீதி, பாலம், பொதுநோக்கு மண்டபம், ச.ச.நி. ஏனைய அபிவிருத்தி) வடக்கிற்கு பிரத்தியேகமாக நிதி ஒதுக்குமாறும் கோருங்கள், கடிதம் மூலம் முன்வையுங்கள்.

மேலும் கடந்தகாலங்களில் பிரதேசங்களை நகர சபையாக்கும் திட்டம் (PS-uc) முன்னெடுத்து கைவிடப்பட்டதைக் கூறுங்கள். இப் பின்னடைவு குறித்து விவாதியுங்கள்.

உள்ளூராட்சி சபைகள் யாவும் மேலெழுவதற்கு பதிலாக வடக்கில் பெரும்பாலான சபைகள் நலிவுற்றுள்ளதை சுட்டிக்காட்டுங்கள். இல்லாவிடில் அவர்கள் வந்து சென்ற கதை மட்டுமே ஊடகங்களில் வரும். இது வழமை. தவிசாளர்களே, உப தவிசாளர்களே உயர்ந்த நோக்கத்தில் உங்கள் கருத்துக்களை முன்வைத்து மடிந்து கொண்டிருக்கும் தமிழ் சமுதாயத்திற்கு புத்துயிர் கொடுத்து மறுவாழ்வு அழியுங்கள்.

இதுவே ஆக்கபூர்வமான சிந்தனைக்கு வழியமைக்கும். பேண்தகு நிலைக்கு இட்டு செல்லும் .

நன்றி.

**கௌரவ உறுப்பினர்**
**பிரதேச சபை**
**வடமராட்சி.**

49. பின்வருவனவற்றுள் நிறையுணவு
1) இடியப்பம்　2) இறைச்சி　3) கருவாடு　4) பால்

50. சமையலின் போது சமைப்பவர் பயன்படுத்தும் அங்கி
1) ஏப்ரன்　2) துடைதுணி　3) பாவாடை　4) சட்டை

51. திடீர்விபத்து ஏற்படும் போது அம்புலன்ஸ் வண்டியை அழைக்க வேண்டியிருப்பின் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்
1) 220　2) 1110　3)110　4) 1220

52. உள்ளூர்த்தபால் அனுப்புவதற்கு செலுத்த வேண்டிய ஆகக்குறைந்த முத்திரைக்கட்டணம்
1) ரூ.8.00　2) ரூ.5.00　3) ரூ.10.00　4) ரூ.4.00

53. அடிப்படை வர்ணங்கள் எத்தனை?
1) 4　2) 5　3) 3　4) 2

54. பனிக்கட்டியை நீரில் இடும்போது அவதானிக்கக்கூடியது
1) பனிக்கட்டி மிதக்கும்　2) நிறம்மாறும்　3) அமிழும்　4) வெடிக்கும்

55. அரசஇலச்சினையில் தன்னிறை வைக் குறிப்பது
1) நிறைகுடம்　2) நெற்கதிர்　3) சூரியசந்திரர்　4) தர்மசக்கரம்

56. காந்தம் கவராத பொருள்
1) ஊசி　2) சவரஅலகு　3) ஆணி　4) ஈர்க்கு


57. இலங்கையில் தேசிய விளையாட்டில் ஒரு அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை
1) 10பேர்　2) 11பேர்　3) 6பேர்　4) 4பேர்

(17) பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக

58. காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப்பெரிய எண் யாது?

| 5 | 2 |
|---|---|
| 1 | 3 |


உருவில் ஒரு மீனின் காணப்படுகின்றது. அதன்



59. விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..............................

60. வட்ட முகங்களின் எண்ணிக்கை யாது? ..............................

ஒரு மணித்தியாலயத்திற்குள் நகருக்குள்ளே நுழைந்த வாகனங்களின் எண்ணிக்கையை வரைபு காட்டுகிறது. வரைபை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக




61. நகரத்திற்குள் குறைந்த அளவில் நுழைந்த வாகனம் எது?
..............................................................

62. நகரத்திற்குள் நுழைந்த வாகனங்களின் மொத்த எண்ணிக்கை?
..............................................................

63. கூடிய அளவில் நுழைந்த வாகனத்திற்கும், குறைந்தளவில் நுழைந்த வாகனத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?
..............................................................

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(1).கனவுரு (ii)12 (2).தொண்ணூறாயிரத்து தொண்ணூற்று ஒன்பது (3).409,106 (4).(i)300/= (ii) 1kg (iii) 160/= (iv) 538/= (5).கூம்பு (ii).1 (iii). 2 (6).10.45 (7).20 (8).12மணி 20நிமிடம் (9).8L 500ml (10).0.4 (11).034001 (12).66m (13).ரூபா 37.50சதம் (14).LIX (15).8 (16).48cm (17).0 (18).285 (19).(i) 87 (ii)221 (iii)14 (iv)456 (v)2- 45 ,3-50, 4-75, 5-65, நிழற்றல் (20).6வருடம் (21).50 (22).8cm (23).150 (24).7L (25).பென்சில் 8.25சதம் பேனை - 3 கடித ரூ.1.50சதம் மொத்தம் -148ரூபா (26).120 (27).11வரை (28)5055 (29).30 (30).4m (31).3மணி 5நிமிடம் (32).5/6 (33).(i) 15 (ii)45வரை நிழற்றல் (34).$10km^2$ (35).34cm (36).1பெட்டி (37).675 (38).1725 (39).100m (40).56m (41).10

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



(01) 01 தொடக்கம் ஐந்து வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

01. சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல குயில்,
1) அகவும்　2) கூவும்　3) கத்தும்


02. வாழையின் இளையது குட்டி என்பது போல பலாவின் இளையது
1) குட்டி　2) கன்று　3) நாற்று


03. ஆட்டின் மலம் புழுக்கை என்பது போல கழுதையின் மலம்
1) எச்சம்　2) இலத்தி　3) விட்டை


04. கற்குவியல் என்பது போல மாமரங்கள்
1) தோப்பு　2) நிரை　3) வரிசை

05. சிற்பம் செதுக்குபவன் சிற்பி என்பது போல ஓவியம் வரைபவன்
1) கவிஞன்　2) ஓவியன்　3) குயவன்





(02) 06 தொடக்கம் 08 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள படங்களுடன் நெருங்கிய தொடர்புடைய மூன்று சொற்களைக் கொண்ட விடையில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக




06.

(01) கடல், எரிபொருள், மாலுமி
(02) தண்டவாளம், எரிபொருள், வேகம்
(03) வீதி, எரிபொருள், பயணம்

07.

(01) அணிதல், வெட்டுதல், பலகை
(02) பலகை, அணிதல், ஆடம்பரம்
(03) துணி, வெட்டுதல், உபகரணம்


08.

(01) கிணறு, கத்தும், குட்டி
(02) கடல், உணவு, குஞ்சு
(03) நிலம், உணவு, பாயும்

(03) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் முதலில் உள்ள உருவில் நிழற்றியுள்ள பின்னத்திற்கு சமமாக நிழற்றப்பட்ட உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக


09.

..........
1) 
2) 
3) 

10.

..........
1) 
2) 
3) 

**(04)** கீழே தரப்பட்டுள்ள முதல் இரு உருக்களிலும் உள்ள இலக்கங்களுக்கு இடையிலான தொடர்பினை அவதானித்து மூன்றாவது உருவில் உள்ள வினாக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணின் கீழ் கோடிடுக

11. 


1) 5  2) 3  3) 12

12. 


1) 5  2) 4  3) 3

13. 949 உடன் 741 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது? ..................

14. 5072 இலிருந்து 2929ஐக் கழிக்க வித்தியாசம் யாது? ..................

**(05)** பின்வரும் பாடல் பகுதியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளைப் பாடலிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டில் எழுதுக

ஒற்றுமையாக விரல்கள் இருப்பதால்
உன்தன் கைக்கு மிகுந்த பலம்!
ஒற்றுமையாக மக்கள் வாழ்வது
ஒவ்வொரு நாட்டிலும் நிறைந்த வளம்

தேடித் தேடிப் படிப்பவர்
தெளிந்த அறிவை அடையலாம்
ஓடி ஓடி உழைப்பவர்
உயர உயர ஏறலாம்

கிலுகிலு கிலுவென மழை
சிரிக்க வைப்பது மழை
அள்ளிக் கொள்ளவும் மழை
ஆட்டம் போடவும் மழை

15. ஒவ்வொரு நாட்டிலும் நிறைந்த வளம் எது? ..................
16. விரல் என்பதன் பன்மைப் பெயர்ச்சொல்லை எழுதுக? ..................
17. இங்கு வந்துள்ள இரட்டைக்கிளவி எது? ..................
18. அடுக்குமொழி ஒன்று எழுதுக ..................
19. அழ என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக? ..................
20. பாடலில் வந்துள்ள பெயர்ச்சொல் ஒன்று எழுதுக ..................

**(06)** அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக

21. உணவின் மறுபெயர் .................. (ஊன், ஊண்)
22. ஆற்றில் வருவது .................. (வெல்லம், வெள்ளம்)

**(07)** பின்வரும் தொடர்மொழிகளின் கருத்தை வெளிப்படுத்தும் தனிச்சொல்லை எழுதுக

23. கடவுள் உண்டு என நம்புபவன் ..................
24. பத்திரிகைகளுக்குச் செய்திகளைத் திரட்டித் தருபவர் ..................

**(08)** பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக

25. கிளிகள் பழுத்த கனிகளைக் கொத்தித் தின்றன ..................



**(09)** பின்வரும் வாக்கியத்தை பன்மையாக மாற்றி எழுதுக

26. மரம் முறிந்து விழுந்தது ..................

**(10)** பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக

27. கை கொடுத்தல் ..................
28. கண் திறத்தல் ..................

**(11)** பின்வரும் சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் ஆக்குக

29. கல்வி / எழுத்து / இளமையிற் / சிலையில் ..................
30. கடிப்பது / பழக்கமாகும் / தவறான / நகம் ..................
31. நிறத்துண்டியால் / ஆனது / ஒலிம்பிக்கொடி / வெள்ளை ..................

**(12)** பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக

32. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் ..................
33. ஆழமறியாது காலை விடாதே ..................

**(13)** பின்வரும் தமிழ்ச்சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக

34. பாடசாலை ..................
35. வீடு ..................
36. கிணறு ..................

**(14)** கருத்தைத் தமிழில் எழுதுக

37. Good morning ..................
38. Where are you going? ..................
39. please sit down ..................

**(15)** பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்திலும் கருத்தைத் தமிழில் எழுதுக

40. கபுடா களு பாட்டய ..................
41. ஓயாகே நம மொக்கத? ..................
42. இலங்கையில் உள்ள இரு மாவட்டங்களின் பெயர்களை எழுதுக?
(i) .................. (ii) ..................

**(16)** சரியான விடையின் கீழ்க்கீறிடுக

43. சித்திரைப் புத்தாண்டு காலத்தில் பூக்கும் பூ
1) முள்முருக்கு 2) இலுப்பை 3) இறப்பர் 4) பாலை


44. பின்வருவனவற்றுள் ஆணிவேர் உள்ள தாவரம்
1) பனை 2) தென்னை 3) நெல் 4) வேம்பு

45. தாவரங்களில் இரவைக்கழிக்காத பிராணி,
1) ஆடு 2) ஆந்தை 3) தேவாங்கு 4) காகம்

46. தாவர இலைகளை வளைத்துச் சுருட்டி கூடுகட்டுவது
1) தேன்குருவி 2) வண்ணத்துப்பூச்சி 3) நத்தை 4) செல்வெறுப்பு

47. முலையூட்டி வகையைச் சேராதது
1) நாய் 2) வெளவால் 3) கோழி 4) குரங்கு

48. பொருட்கள் அடைத்து வரும் பெட்டிகளில் இக்குறியீடு குறிப்பது



i. இப்பக்கம் மேலே
ii. இப்பக்கம் கீழே
iii. இப்பக்கம் வலது பக்கத்தில்
iv. இப்பக்கம் இடது பக்கத்தில்

# விசாரணை அறிக்கையை வெளியிட இதுவே சரியான தருணம்



உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகளை செயற்படுத்துவதற்காக ஐ.நா.விசாரணை அறிக்கையைப் பிற்போட வேண்டிய அவசியம் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். மார்ச் மாதம் விசாரணை அறிக்கை வெளியிடப்படுவது உள்நாட்டு பொறிமுறையினை பலப்படுத்த வாய்ப்பாக அமையும். நல்லிணக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் போல் உண்மைகளைக் கண்டறிவதற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

உண்மை வெளிவருவது தவறெனவோ அல்லது இப்படியானதொரு சூழ்நிலையில் உண்மை வெளிவருவது தவறெனவோ எவரும் தெரிவிக்க முடியாது. அதிலும் விசேடமாக ஒரு நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் அது உண்மையினை வெளிப்படுத்துவதில் மட்டுமே ஏற்பட முடியும். உண்மைகளை மறந்து இறுதி யுத்தத்தில் என்ன நடந்தது என்பதை மறந்து, நாட்டில் இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதென்பது சாத்தியமற்ற விடயமாகும்.

வடமாகாண சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை கற்பனையானதோ எவர் மீதும் குற்றம் சுமத்தக் கூடிய வகையில் பொய்யாக தயாரிக்கப்பட்டதோ அல்ல. இதில் வடக்கில் நடந்த உண்மைகளே தெரிவிக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணையில் உண்மை என்ற பதத்திற்கே இடம் வழங்கப்படவில்லை. இனப்படுகொலைக்கான உண்மை கண்டறியப்படாது எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது?

ஆனால் கடந்த அரசாங்கம் அதையே செய்து வந்தது. எனவே இப்போதும் அதே தவறினை செய்யாது உண்மை நிலைமைகளை உடனடியாக கண்டறிய வேண்டும். எனவே இந்தியா மற்றும் ஏனைய சர்வதேச நாடுகள் தற்போது நல்லிணக்கத்தினை ஏற்படுத்த நல்ல சந்தர்ப்பம் என தெரிவிக்குமாயின் இது தான் உண்மையினைக் கண்டறிய நல்ல நேரம் என்பதையும் இவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். எனவே சர்வதேச அறிக்கைகளை வெளியிட இதுவே பொருத்தமான தருணம்.

அதேபோல் ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கையினை பிற்போட வலியுறுத்துவதற்கான மிகச் சரியான காரணங்களை இலங்கை அரசாங்கம் முன் வைக்க வேண்டும். இல்லையேல எம்மால் அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் இணங்கிச் செயற்பட முடியாது. இலங்கையின் உள்ளக பொறிமுறைகளுக்கு இலங்கை அரசு முக்கியத்துவம் கொடுப்பதைப் போல் சர்வதேச விசாரணைக்கும் இடமளித்து அவர்களுடன் இணங்கி செயற்படவும் தயாரெனின், அதேபோல் இலங்கை அரசு கேட்கும் கால அவகாசத்தினுள் சர்வதேச பொறிமுறையுடன் இணைந்து அடுத்த கட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளுமாயின் அது தொடர்பில் நாம் பரிசீலிப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மூக்குக் கண்ணாடிக[illegible] பதிவுக் கட்டணமே அ[illegible]வீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வில் பதிவுக் கட்டணமாகவே மக்களிடமிருந்து 200 ரூபா அறவிடப்பட்டதாக நந்தாராம தமிழ் பௌத்த அமைப்பினால் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் விளக்கமளிக்கையில்,

நந்தாராம தமிழ் பௌத்த அமைப்பினால் அண்மையில் நடாத்தப்பட்ட இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வில் பதிவுக் கட்டணமாக 200 ரூபா பெறப்பட்டதாகவும், அதிக விலை கூடிய கண்ணாடிகளை மக்கள் தங்களின் விருப்பத்துக்கு ஏற்ப குறைந்த விலையில் பெற்றுக் கொண்டதாகவும் நந்தாராம தமிழ் பௌத்த அறநெறிப்பாடசாலைத் தலைவர் ஏ.ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி குறித்த அமைப்பினால் பல்வேறு நலத்திட்டங்கள் மக்களுக்காக முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா.விசாரணையில் மாற்றமில்லை சர்வதேச தரத்தில் உள்ளக விசாரணை

## இதுதான் மூனின் பிந்திய நிலைப்பாடு

இலங்கையின் வடக்கில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகளில் மாற்றம் இல்லை என்பதே, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நிலைப்பாடு என, அவரது பேச்சாளர் ஸ்டீவன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவிலயாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்ளக விசாரனைகளையும் சர்வதேச தரத்திற்கு ஏற்ற வகையில் சிறந்த முறையில் நம்பகமான விசாரணைகளையும் நடாத்த வேண்டும் என்பது செயலாளர் நாயகத்தின் நில்லப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பரமர் சங்கமம்



'சட்டம் என்கையில்' என்னும் பெயரில் இருப்பது இருபத்தைஞ்சு வருசங்களுக்கு முன்னாலை திரைப்படமொண்டு வந்துது.

அதுக்குப் பின்னாலைதான் எல்லாருமே சட்டத்தைக கையிலெடுக்கத்துவங்கி விட்டினமெண்டு நினைக்கிறன்.

ஏனெண்டா ரெண்டு மூண்டு தசாப்தங்களுக்கு முன்னாலை வாழ்ந்த சனங்கள் சட்டம் ஒழுங்கை அந்தளவுக்குக் கடைப் புடிச்சதை நினைத்தும் பாக்கிறன். ஊருக்குள்ள அயலட்டையலோடை பிழங்கேக்கை அந்தளவு பக்குவமாகப் பேசிப்பறைவினம்.

சண்டையளோ, துரோகச் செயல்களோ நடக்கேல்லை எண்டு சொல்லிவிட முடியாது. அது எப்பில தப்பில பல வருசங்களுக்கு ஒண்டு நடந்திருக்கும். இப்பத்தையப் போலை வீட்டை விட்டு வீதியிலை இறங்கினா சண்டை சச்சரவு ஒண்டேனும் புடிக்காமல் எங்கட காரியங்களைப் பாத்துக்கொண்டு வீடு திரும்பேலாதெண்ட அளவுக்கில்லை.

அண்டைக்குப் போன முதலாம் தேதி யாழ்.பிரதான வீதியில்க் பார் சந்தியெண்டு அந்தக் காலத்தில் பேர்போன முதலாம் குறுக்குச் சந்தியிலை பிரதான வீதியில் சந்தியை நெருங்கி வந்து கொண்டிருந்த என்ரை சைக்கிளைத் தட்டிவிடுவதைப் போலை ஒரு ஆட்டோக்காறன் தெற்குப் பக்கமாக இருந்து வந்து இடதுகை மூலையில் வெட்டி நிற்பாட்டப் பாத்தான்.

நான் இடது கைப்பக்கம் போனால் வடிகாலுக்குள் விழுவன். வலது கைப்பக்கம் போகவும் முடியாமல் ஆட்டோ மறிச்சு நிண்டுது. காலை ஊண்டி இறங்கி அவனுட்டைக் கேட்டன். "நேற்றுத் தானை இதுலை ரெண்டு பேர் செத்தது." ஜனவரி முதலாம் திகதி சனிக்கிழமை காலை ஆட்டோவில் வந்த இருசகோதர மொழி பேசுவோர் தனியார் பஸ்ஸால் மோதி கொல்லப்பட்டிருந்தனர்.

"நான் இதிலைதான் நிப்பாட்டுறனான்." எண்டான் திரும்பவும் முதல் கேட்ட மாதிரி நேற்றுத்தானை ரெண்டு பேர் செத்தேண்டு சொல்லி விட்டு "நான் றிப்போட்டர்" எண்டன். அவனுக்கு வந்துதே கோவம். "நீ றிப்போட்டரெண்டான்ன?" எண்டு ஆட்டோவுக் குள்ளேயே அங்குமிங்கும் துள்ளினான்.

அடுத்தென்னைத்தள்ளி விட்டான். விழுந்திடாமல் நான் சுதாகரித்து நிற்க ஆட்டோவை விட்டு அவன் என்னை நெருங்கி வர, ரபிக் பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்து தரித்தனர். ஆட்டோ நிண்ட நிலையைப் பாத்து இதிலை நிற்பாட்டேலா தெண்டினம். நான் சகோதர மொழியில் "புழையேம் விட்டிட்டு றிப்போட்ட ரென்ன எனக்கழிக்கவாறா" னெண்டன்.

ஆட்டோக்காறனை 'வோணிங்' செய்து விட்டு பொலிஸார் போக என்னைப்பாத்து அவையள் சொன்னாச் செய்வமெண்டான். "அப்ப நாங்க சொன்னாக் கேக்க மாட்டியள்" எண்ட என்னைப்பாத்து பக்கத்தில் நிண்ட சும்மா வழக்குப் பேசும் இலவசப்புரக்கிராசி ஒண்டு "நீபோபோ" எண்டிச்சுது.


"உன்னையும் தெரியும் செம்மையா அடிவாங்குவியள்" எண்ட நான் சைக்கிளிலேறி மிதிச்சன் உப்புடித்தான் எந்த நாளும் ஏதாவதொருகோளாறில்லாமல் போய்வரேலாது. ஆட்டோ, மினிவான்காறர் வலுமோசம். கொஞ்சக் காலத்துக்கு முன்னாலை மினிவான் ஆளைமோதிக் கொண்டிட்டால் மினிவானைக் கொழுதிப் போடுங்கள் சனங்கள். நீதிவான் வந்து பாத்திட்டு மக்களைச் சட்டத்தைக் கையிலெடுக்க வேண்டாமெண்டதும் ஞாபகமிருக்கு.

இனிப்பாருங்கள் போக்குவரவிலைச் சட்டமொண்டைக் கையிலை கொண்டுதான் திரிய வேண்டிக்கிடக்கு. மாட்டுப் பட்டால் செம்மையாக்குடுத்து விடலாம். இல்லையே பின்னை சொல்லுங்க பாக்கலாம்.

# என்றும் குன்றாத உறவ வலுவடையும் வாய்ப்ப

(கொழும்பு)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான (Wang Jiarui) வோங் ஜியாருய் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.



இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் இந்த சந்திப்பில் கருத்துக்கள் பகிரப்பட்டுள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவுடன் கடந்த பல வருடங்களாக இலங்கை நிலையான உறவைப் பேணி வருவதாகவும் இதனை மேலும் வலுப்படுத்த விரும்புவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த சந்திப்பில் குறிப்பிட்டதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனா மற்றும் இலங்கைக் கிடையிலான உறவு முக்கியத்துவம் பெறுவதாக இந்த சந்திப்பின் போது பிரமதர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் சீன நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சீன கம்யூனிஸ்ட் கட்சி இலங்கை மற்றும் சீன மக்களிடையே இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும் ஒருங்கிணைப்பதற்கும் தயாராக உள்ளதாக வோங்ஜியாருய் இந்த சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.


## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : க.சஜிபன்

முகவரி : உரும்பிராய் வடக்கு உரும்பிராய்.

அகவை 9 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

..............................

பெற்றோர் கையொப்பம்


# வாகனங்களின் விலைகுறைப்பு இழுபறி நிலைக்கு தீர்வு

(கொழும்பு)

நடைமுறையிலுள்ள பெறுமதிக்கு ஏற்ப மதிப்பீடு செய்யும் முறைமையை மாற்றுவதன் மூலம், இறக்குமதி செய்யப்படும் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின விலைகள் தொடர்ந்தும் தளம்பாமல் இருக்கும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் குறிப்பிடுகின்றது.

ஆயினும், வாகன இறக்குமதியாளர்களின் கோரிக்கையின பிரகாரமே புதிய மதிப்பீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிக்கின்றார்.

புதிய வாகன மதிப்பீட்டு முறைமை குறித்து இறக்குமதியாளர்களை தெளிவுபடுத்தும் கருத்தரங்கொன்றும் இலங்கை சுங்கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

# ...ல் கரை ஒதுங்கின ...று திமிங்கிலங்கள்



நியூசிலாந்து பேர்வெல் ஸ்பிட்டில் உள்ள கோல்டன் பே கடற்கரை பகுதியில் 200 திமிங்கிலங்கள் நேற்றுமுன்தினம் கரை ஒதுங்கின. இவை 'பைலட்' ரகத்தை சேர்ந்தவை. தகவலறிந்ததும் கடல்வாழ் உயிரின ஆர்வலர்கள் விரைந்து சென்று அந்த திமிங்கிலங்களை மீட்டு மீண்டும் கடலுக்குள் விட்டனர். அவற்றில் 27 திமிங்கிலங்கள் இறந்துள்ளன.

இவை கரை ஒதுங்கியதற்கான காரணம் தெரியவில்லை எனவும் அது குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 'பைலட்' ரக திமிங்கிலங்கள் 20 அடி (6 மீற்றர்) வரை நீளமாக வளரக் கூடியவை. இவை நியூசிலாந்து கடல் பகுதியில் அதிக அளவில் உயிர் வாழ்கின்றன. இதுபோன்று திமிங்கிலங்கள கரை ஒதுங்கிய சம்பவம் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெஷாவரில் தாக்குதல் 19பேர் பலி; 50பேர் காயம்

பாகிஸ்தானில் உள்ள பெஷாவர் நகரின் ஷியா முஸ்லிம்களின் மசூதிக்குள் புகுந்து தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதலில் 19 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 50 பேர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை, பிரார்த்தனைக்காக மசூதியில் மக்கள் கூட்டம் அதிகம் இருந்தது. இந்நிலையில் அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் மசூதியின் உள்ளே புகுந்து குண்டுகளை வீசி தாக்குதல் நடாத்தினர்.

நண்பகல் பிரார்த்தனைக்காக இமாமிய மசூதியில் மக்கள் பெருமளவில் கூடியிருந்தனர். அப்போது உள்ளே புகுந்த மர்ம தீவிரவாதக கும்பல் துப்பாக்கியால் சுட்டும், குண்டுகளை வீசியும் தாக்குதல் மேற்கொண்டனர்.

இன்னும் சில தீவிரவாதிகள் மசூதிக்குள் இருப்பதாகவும், அவர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் சண்டை நிகழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியா-பாகிஸ்தான் பேச்சு மோடிக்கு அமெரிக்கா வரவேற்பு

(வொஷிங்டன்)



இந்தியா - பாகிஸ்தான் இடையே மீண்டும் பேச்சுவார்த்தையை நடாத்த பிரதமர் மோடி முயற்சிகளை மேற்கொண்டுள்ளதற்கு அமெரிக்கா வரவேற்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில் இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றத்தை தணிக்க பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்வு காணமுடியும் என்பதில் இரு நாடுகளும் உறுதியாக இருப்பதை வரவேற்பதாக கூறியுள்ளார்.

தெற்கு ஆசியாவில் இரு நாடுகளும் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அவசியம் என்று கூறியுள்ள அவர் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த ஒரு நடவடிக்கையையும் அமெரிக்கா வரவேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

# வெனிசுலாவில் இராணுவப் புரட்சி விமானப்படைத் தளபதி கைது

(கராகஸ்)

தென்னமரிக்காவில் எண்ணெய் வளம் மிகுந்த வெனிசுலா நாட்டில் நிகோலஸ் மதுரோ அதிபராக உள்ளார். எண்ணெய் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதால் தற்போது அங்கு பொருளாதார நிலையில் மந்தம் ஏற்பட்டுள்ளது.

இதைத்தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு இராணுவ புரட்சியில் ஈடுபட சில அதிகாரிகள் முயன்றனர். அது பற்றி தகவல் அறிந்த அதிபர் மதுரோ இராணுவ புரட்சியை முறியடித்தார். இந்த தகவலை அதிபர் மதுரோ நேற்று முன்தினம் தொலைக்காட்சியில் தெரிவித்தார்.

இந்த புரட்சியில் விமானப் படை முன்னாள் தளபதி மட்டும் கைது செய்யப்பட்டுள்ளார். 10 இராணுவ வீரர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# டில்லி முதலமைச்சராக பதவியேற்றார் கெஜ்ரிவால்



இந்தியாவின் டில்லி முதலமைச்சராக அரவிந்த் கெஜ்ரிவால் நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

அண்மையில் நடந்த டில்லி மாநில சட்டசபை தேர்தலில் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சி மொத்தமுள்ள 70 தொகுதிகளில் 67 தொகுதியை வென்று ஆட்சியை கைப்பற்றியது. தேர்தல் வெற்றிக்கு பின்பு எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் ஆம் ஆத்மி தலைவர் கெஜ்ரிவால் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் டில்லியில் ஆட்சி அமைக்க துணைநிலை ஆளுநர் நஜீப் சுங்கை சந்தித்து உரிமை கோரினார்.


கெஜ்ரிவால் முதலமைச்சராக பதவி ஏற்பு விழா டில்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் நேற்று 12.15 மணியளவில் நடைபெற்றது. இதில் டில்லியின் 8 ஆவது முதலமைச்சராக ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு டில்லி துணை நிலை ஆளுநர் பதவிபிரமாணம் செய்து வைத்தார்.

அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான அமைச்சரவையில் துணை முதலமைச்சராக மனிஷ் சிசோடியா பெறுப்பேற்றார். மேலும், அமைச்சர்களாக ஆசிம் அகமது கான், சந்தீப் குமார், சத்யேந்தர் ஜெய்ன், கோபால் ராய், ஜிதேந்தர்சிங் தோமர் ஆகியோரும் பொறுப்பேற்றனர்.

அமைச்சுக்களுக்கான துறை விபரங்களாக மனிஷ் சிசோடியா - (துணை முதலமைச்சர் நகரப்புற வளர்ச்சி துறை)ஆஷிம் அகமது கான் -(உணவு மற்றும் பொது வழங்கல் துறை )சந்தீப் குமார் (பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை) சுகாதாரத்துறை மற்றும் தொழில் துறை - (சத்யேந்திர ஜெயின்) போக்குவரத்து மற்றும் தொழிலாளர் துறை-(கோபால் ராய்)சட்டத் துறை மந்திரி- (ஜிதேந்திர சிங் தோமர) ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

# டில்லி தேர்தல் தோல்விக்கு கிரண்பேடியே காரணம்

## பா.ஜ.க.குற்றச்சாட்டு



(புதுடில்லி)

கிரண்பேடியை கட்சியில் சேர்த்ததே படுதோல்விக்கு காரணம் என்று டில்லி பா.ஜ.க குற்றம்சாட்டியுள்ளது.

டில்லி தேர்தலில் 3 தொகுதிகளை மட்டுமே பா.ஜ.க. வெற்றி பெற்றது. இந்தப் படுதோல்விக்கான காரணங்கள் குறித்து ஆராய டில்லி பா.ஜ.க. சார்பில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. 2 மணி நேரம் நடைபெற்ற இந்த கூட்டத்தில் பங்கேற்க கிரண் பேடிக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை, தேர்தலுக்கு 3 வாரங்களே உள்ள நிலையில் கிரண் பேடியை கட்சிக்குள் கொண்டு வந்தது தான் படுதோல்விக்கு முக்கிய காரணம் என்று கூட்டத்தில் பங்கேற்ற பெரும்பாலான தலைவர்கள் கூறியதாக பா.ஜ.க. மூத்த தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

தோல்விக்கான காரணங்கள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய ஒவ்வொரு மாவட்ட தலைவருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

# தீவிரமாக பரவும் பன்றிக்காய்ச்சல் இந்தியாவில் 250 பேர் பலி

(சென்னை)




இந்தியாவின் வட மாநிலங்களில் கடந்த இரண்டு மாதங்களாக பன்றிக்காய்ச்சல் தாக்கம் தீவிரமாக உள்ளது.

டில்லி, ஆந்திரா, தெலுங்கானா, ராஜஸ்தான், மராட்டியம் உட்பட பல மாநிலங்களில் பன்றிக்காய்ச்சலால் பாதிககப்பட்டவர்களில் இதுவரை 250இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர். பனிப்பொழிவு குறைந்தால் தான் இந்த மாநிலங்களில் பன்றிக்காய்ச்சலை கட்டுப்படுத்த முடியும் என்று அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே ஆந்திரா, தெலுங்கானாவில் கடந்த 2 வாரங்களில் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து விட்டது. இதன் தாக்கம் தமிழ்நாட்டிலும் பரவத் தொடங்கியுள்ளது.

இருவாரங்களுக்கு முன்பு வரை தமிழ்நாட்டில் பன்றிக்காய்ச்சல் பரவிவிடாதபடி கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டு இருந்தது. ஆனால் கடந்த 10 நாட்களாக தமிழ்நாடு முழுவதும் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அச்சப்படும் வகையில் அதிகரித்துள்ளது.

கடந்த மாதத்தில் இருந்து எடுக்கப்பட்ட கணக்கெடுப்புப்படி தமிழ்நாட்டில் இந்த ஆண்டு இதுவரை 186 பேரை பன்றிக்காய்ச்சல் தாக்கியுள்ளது. இவர்களில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் கடந்த இரு வாரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் புதிதாக பன்றிக்காய்ச்சல் தாக்கியுள்ள 9 பேரையும் சேர்த்து இதுவரை 47 பேரைப் பன்றிக்காய்ச்சல் தாக்கியுள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் உயராமல் கட்டுப்படுத்த சுகாதாரத்துறை அதிகாரிகள் தீவிர முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# ஸ்ரீபத்மநாபசுவாமி ஆலயத்தின் 266 கிலோ தங்கம் மாயமானது

(திருவனந்தபுரம்)

முன்னாள் தலைமை கணக்காயரும், இந்திய ஆடிட்டருமான ஜெனரல் வினோத் ராய் தலைமையில் கேரள மாநிலம் ஸ்ரீபத்மநாப சுவாமி கோவிலில் சமீபத்தில் நடாத்தப்பட்ட தணிக்கை குறித்த அறிக்கை நீதிமன்றத்தில் கடந்த 3ஆம் திகதி தாக்கல் செய்யபட்டது. அதில் கோவிலில் இருந்து 266 கிலோ தங்கம் மாயமானதாக தெரிவிக்கபட்டுள்ளது.



அறிக்கையில் இந்த விவரங்கள் குறித்து ராய்க்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்த தகவல்கள் வருமாறு,

கோவிலில் 82 முறை திருடப்பட்டுள்ளது. கோவில் பணிக்காக மட்டும் 893.44 கிலோ தங்கம் எடுக்கபட்டு உள்ளது. ஆனால 627 கிலோ தங்கம் மட்டுமே மீண்டும் திரும்பி உள்ளது.266 கிலோ தங்கத்தைக் காணவில்லை. தறபோதைய விலை நிலவரப்படி89.90 கோடி தங்கத்தைக் காணவில்லை. 4 ஆண்டுகளாக கோவில் கணக்குகளில் ரூ.8கோடிக்கும் அதிகமாக முறைகேடுகள் நடைபெற்று உள்ளது. என கூறப்பட்டுளளது.

# யாழ். மண்ணில் ஆராய்ச்சிக்காக 20வகை உருளைக்கிழங்குகள்

## விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி தகவல்

சிறந்த வகை விதை உருளைக்கிழங்குகள், "சீதாஎலிய" விலிருந்து திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டு ஆராய்ச்சிக்காக பயிரிடப்பட்டுள்ளதாக திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி க.கருணைநாதன், தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பயிரிட்டு சிறந்த வகை உருளைக்கிழங்குகளை பெற்றுக கொள்வதற்காக இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. நோய் எதிர்ப்புத்தன்மை, விளைசசல், நல்லவிளைவு மற்றும் இம் மண்ணுக்கு பொருத்தமானதா? போன்ற விடயங்களை அறிந்து கொள்ள இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆராய்ச்சியின் போது 20 வீதமான உருளைக்கிழங்குகள் பயிரிடப்பட்டுள்ளது. 20 வகை உருளைக்கிழங்குகளின் தன்மைகளையும் இந்த ஆராய்ச்சி மூலம் அறிந்து கொள்ள முடியும். இந்த ஆராய்ச்சியின் முடிவில் சிறந்த பொருத்த[illegible]ன உருளைக்கிழங்குகளை [illegible] செய்து விதைகளை யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### ஈ.பி.டி.பி....

கோப்பாயில் அமைந்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற தொகுதி ரீதியான செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீண்டகால ஆட்சிக்கூடாகத் தான் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியுமென்ற கொள்கைத் திட்டங்களுக்கு அமைவாக வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தோம்.

அந்தவகையில், எமது கொளகையை ஏற்றுக் கொண்டு வாக்களித்த மக்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனாலும் ஆட்சி மாற்றத்தின் மூலம் தான் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமென்ற நம்பிக்கையில் நாடளாவிய ரீதியில் மக்களின் முடிவுக்கு அமைவாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து புதிய அரசிற்கு வெளியே இருந்து கொண்டு ஆதரவளிப்பதற்கும் நாம் எண்ணியுள்ளோம்.

அத்துடன் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தனியாக போட்டியிட்டு தேசிய அரசாங்கத்தில் பங்கெடுப்பதும் எமது நோக்கமாகும்.

இதனிடையே எமது இணக்க அரசியலை சரணாகதி அரசியல் எனக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று அதையே ஏற்றுக் கொள்ளும் நிலையிலுள்ளனர்.

மாநிலத்திலும், மத்தியிலும் ஆளுங்கட்சியில் இருக்கும் அவர்களே பதில் கூற வேண்டிய கடப்பாடு உடையவர்களாக மட்டுமன்றி மத்திய அரசில் கொள்கை வகுக்கும் பொறுப்பிலும் இருக்கின்றார்கள்.

இந்நிலையில் சாத்தியமாகாத விடயங்களை முன்வைத்து இருப்பதையும் இல்லாமல் செய்யும் அல்லது பலவீனப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதுவரையில் எமது மக்களுக்கு எதையெதைச் செய்தார்கள் என்றும் கேள்வியெழுப்பினார்.

இதனிடையே எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற நாளாந்த பிரச்சினைகள் முதற்கொண்டு நீடித்த அரசியலுரிமைப் பிரச்சினைகளுக்கான தீர்வுக்காக தமிழ் மக்களின் வாரிசாக இருந்து கொண்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாமே முன்னெடுத்து வருகின்றோம் என்பதுடன், எமது மக்களின் பிரச்சினைகளை முன்னிலைப் படுத்தி அவற்றுக்கு உரிய வகையில் தீர்வு காண்பதே எமது நோக்கமாகுமென்றும் தெரிவித்தார்.

எனவே, எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்தொள்ளும் அதேவேளை, சரியானதும் உண்மையானதுமான கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் செல்லுங்கள் எனத் தெரிவித்த செயலாளர் நாயகம் அவர்கள், கடந்த காலங்களில் இணக்க அரசியல் மற்றும் நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகள் ஊடாக முன்னெடுத்த அபிவிருத்தி செயற்திட்டங்களையும் தெளிவுபடுத்தினார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் பசுபதி சீவரத்தினம், கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், ஈ.பி.டி.பியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளர் ஐங்கரன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி பிரதேச இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### அமைச்சுப்...

ஹிரிபுரேகமவை இராஜினாமா செய்யுமாறு சில தரப்பினர் அண்மையில் வலியுறுத்தியிருந்தனர்.

இதன் காரணமாக ரஜீவ விஜேசிங்க அதிருப்தியடைந்திருந்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை தற்போதைய நிலைமைகள் குறித்து தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தான் இல்லாத சந்தர்ப்பத்தில் அமைச்சர் கபீர் ஹாசீம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கு, அழுத்தம் கொடுத்தமை குறித்து தான் கவலை அடைவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### சிறிலங்கா..

கட்சியின் யாப்பில் திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, முன்னாள் அதிபர்களான சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, முன்னாள் பிரதமர்களான ரத்னசிறி விக்கிரமநாயக்க, டி.எம்.ஜெயரட்ண ஆகியோரும், கட்சியின் மூத்த உறுப்பினரான அலவி மௌலானாவும், ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் நிமால சிறிபால டி சில்வா, ஜோன் செனிவிரத்ன ஆகியோர் கட்சியின் மூத்த துணைத் தலைவர்களாகவும், ராஜித சேனாரத்ன, எஸ்.பி. திசநாயக்க, பியசேன கமகே, எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன ஆகியோர் கட்சியின் துணைத் தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மகிந்த ராஜபகசவினால், சுதந்திரக்கட்சியின் துணைத்தலைவராக நியமிக்கப்படடிருந்த முன்னாள் பிரதி அமைச்சர் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தற்போது, சுதந்திரக் கட்சியின் உயர்மட்டத்தில் இருந்து ஓரம்கட்டப்பட்டுள்ளார்.

### யாழ்...

ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு மகஜர் ஒன்றினையும் கைய ளிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

இறுதிப் போரின் போது மிக உச்சக்கட்டமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன. வன்னியில் இனப்படுகொலை நடாத் தப்பட்டது. இறுதிக்கட்டப் போரில் மிக மோசமான நிலையில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு, விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்பட்டது.அதன் பின்பு தமிழ் மக்களுக்கு அமைதியான வாழ்வு கிடைக்குமென்று போராட்டத்தினை நசுக்கியவர்கள் எதிர்பார்த்தார்கள். அது நடைபெறவில்லை.

சர்வதேச நாடுகளும், புலம்பெயர் தமிழர்களின் அழுத்தத்தினாலும், இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டியவை என உணர்ந்து, ஐ.நா. சபையில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்ற விசாரணைகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்த விசாரணை மிக கஸ்ரமான நிலையில் இடம்பெற்றது. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொடரில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருந்தது.விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பதை ஒத்திப் போடுவதற்கு பலர் முயற்சிக்கின்றார்கள் இந்த விசாரணையின் மூலம் தான் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், அநியாயங்கள் வெளிக்கொணர வருமென்று தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

புலம் பெயர் தமிழ் மக்கள், ஈழத்தமிழர்கள், சர்வதேசத்தில் இருக்கின்ற மனித உரிமை ஆர்வலர்கள் ஐ.நா. விசாரணைகள் மூலம் தான், இந்த போர்க்குற்ற விசாரணை இடம்பெற்றது. இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தினைக் கூறி பலர் விசாரணை அறிக்கையினை தாமதிக்க முயற்சிக்கின்றார்கள்.

இந்த விசாரணைஅறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு தாமதிக்கப்படுமாயின், தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமமாகும் என்பதன் அடிப்படையில், இந்த நீதி கிடைக்காமல் போய் விடும்.

ஏதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள அமர்வில், இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை அறிக்கை கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட நாம் என்ற வகையில், விசாரணை அறிக்கையில் உள்ளவற்றினை அறிய வேண்டும். சர்வதேச நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, இந்தியா, போன்ற நாடுகளிடம் மார்ச்சில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த பேரணியில் யாழ்.பல்கலைக்கழக சமூகமும், வடமாகாணத்தில் உள்ள அனைத்து சமூக ஆர்வலர்கள் பொது அமைப்புக்கள் அனைவரினதும் ஆதரவினை வழங்குமாறும் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (25)

## கொட்டடி சித்திவி[illegible] வருடாந்த மகோ[illegible]

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கொட்டடி அருள்மிகு சித்திவிநாயகராலய பெரிய பிள்ளையார் ஆலயம்) வருடாந்த மகோற்சவம் கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று சப்பறத்திருவிழாவும் நாளை வேட்டைத்திருவிழாவும், நாளைமறுதினம் இரதோற்சவமும் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளதுடன் 18ஆம் திகதி சண்டேஸ்வரர் உற்சவமும், 19ஆம் திகதி பிராயச்சித்த அபிஷேகமும், 20ஆம் திகதி வைரவர் மடையும் 24ஆம் திகதி நெல்லிவைரவர் மடையும் நடைபெற்றவுள்ளன. மகோற்சவ காலங்களில் நாள்தோறும் சமயச் செற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன. (01)

## மகா சிவராத்திரி விரதம்

(அளவெட்டி)

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரதநாராயணர் தேவஸ்தானத்தில் நாளைமறுதினம் மகா சிவராத்திரி விரதம் பக்தி பூர்வமாக அனுடடிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாலை 7.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். நான்கு ஜாமப்பூசைகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை பூசை வழிபாடுகளிடையே நித்திரை விழித்து இருப்போருக்காக விசேட சமயச் சொற்பொழிவுகள், வாய்ப்பாட்டு சிறுவர் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற இருக்கின்றன.

அதிகாலை 5.00 மணிக்கு நிறைவுபெறும் விரத நிகழ்வை அடுத்து நடராஜப்பெருமானுக்கு வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று பார்வதி சமேதராய் பெருமான் அலங்காரத்தண்டிகையில் திருவீதி எழுந்தருள்வார். (68)

### நல்லிணக்கத்தை...

ஹும் அண்மையிலேயே எமது அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது. எனவே இவற்றை அடைவதற்கு எமது காலம் தேவையானது

எனவே அனைத்து சமூகங்களும் ஒற்றுமையாக வாழும் கடப்பாட்டை ஏற்படுத்தும் பொறுப்பு அரசினுடையது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். அத்துடன் போரின் போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக நம்பகமான உள்நாட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் இந்த விசாரணைகளில் மீறல்களில் ஈடுபட்டதாக கண்டறியப்படும் குற்றவாளிகளைத் தண்டிக்க அரசாங்கம் தயங்காது.

எல்லா நாடுகள் மற்றும் அமைப்புகளுடனும் இணக்கமாகப் பணியாற்றுவதே புதிய அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை அனைத்துலக அமைப்புகளுடன் புதிய அரசாங்கம் இணைந்து பணியாற்றும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற ரீதியில், எதிர் கொள்ளும் சவால்களை வெற்றி கொள்வதற்கு இடைத்தரகர்களாக செயற்படுவதற்கு தாம் அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா, ஜனாதிபதியின் செயலர் பி.பி.அபேகோன், மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

### ஐ.நா.வின்...

சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இரா. சம்பந்தன், "ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட சர்வதேச விசாரணைக் குழுவின் அறிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு அடுத்த மாத இறுதியில் வெளியிடப்பட வேண்டும் . அந்த அறிக்கையை இல்லாமல் செய்வதோ அல்லது தாமதமாக வெளியிடுவதோ ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. என்றார்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த அமெரிக்காவின் துணை வெளியுறவுச் செயலாளர் மற்றும் பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் ஆகியோருடன் இடம்பெற்றிருந்த சந்திப்புகளின் போதும் இதனைத் தாங்கள் வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"அந்த அறிக்கை வெளிவர வேண்டும். அப்போது தான் நாட்டு மக்களால் கூட உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

போரின் போது இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை என்று வடக்கு மாகாணசபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர், அந்த தீர்மானம் மதிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

### தமிழரின்..

வர் மத்தியிவ் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்


முன்னர் மகிந்த அரசும் சரி தற்போதுள்ள புதிய அரசும் சரி தமிழ் மக்களின் தீர்வை பெற்றுத் தரமாட்டார்கள் முன்னர் இராணுவத்தை குறைப்போம் எனத் தெரிவித்தவர்கள் தற்போது வடக்கில் இராணுவம் குறைக்கப்படமாட்டாதெனத் தெரிவிக்கின்றனர்.

எனவே வரும் தேர்தல்களில் எமது பலம் வெளிக்காட்டப்படுவதன் மூலம் தான் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை விழாவின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டிருந்த சரேஷ் பிரேமச்சந்திரனை தேசிய கொடி ஏற்றலுக்காக அழைத்தபோது 'தேசிய கொடியை ஏற்ற மறுத்துள்ளார் இதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கிராம சேவகரான கே.எஸ். கௌதமன் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார். (16)

# ...வர் பிரச்சினையில் புதிய அரசு பாராமுகம்

## வடக்கு மீனவர்கள் கவலை



புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு இன்று ஞாயிற்றுக் கிழமை மேற்கொள்கின்ற பயணத்தின் போது, இந்திய பிரதமருடன் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினை குறித்தும் முக்கிய பேச்சுக்கள் நடத்துவார் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

இந்த நிலையில், இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக தமது பிரச்சினைகள் குறித்து புதிய அரசாங்கம் தங்களுடன் கலந்தாலோசிக்கவில்லை என்று வடமாகாண மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து இலங்கைக் கடற் பரப்பில் மீன்பிடிப்பதனால் வடமாகாண மீனவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதுபற்றி செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகள், முன்னைய அரசாங்கத்தைப் போன்று இந்த அரசாங்கமும் தமது பிரச்சினைகள் குறித்து பாராமுகமாக நடந்துகொள்ள முயற்சிக்கின்றதோ என்று தங்களுக்கு சந்தேகம் எழுந்திருப்பதாகத் கூறியுள்ளனர்.

இந்திய விஜயத்துக்கு முன்னதாக, மீனவர் பிரச்சனைகள் குறித்து உயர் மட்ட கலந்துரையாடலை நடத்திய ஜனாதிபதியின் கூட்டத்திற்கு மீனவர் பிரதிநிதிகள் அழைக்கப்படவில்லை என்று மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவரும் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் இணையத்தின் தலைவருமான நூர் மொஹமட் ஆலம் சுட்டிக்காட்டினார்.

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கை காரணமாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும், அவற்றைத் தீர்ப்பதற்கு தாங்கள் எதிர்பார்த்துள்ள வழிவகைகள் குறித்தும் வடமாகாண மீன்பிடித் துறை அமைச்சர் மற்றும் வடமாகாண முதலமைச்சர் ஆகியோரிடம் எடுத்துக் கூறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆனாலும், ஜனாதிபதியுடனான சந்திப்பில் மீனவர் பிரதிநிதிகள் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்றும் மொஹமட் ஆலம் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வருவதை முற்றாக தடுத்து நிறுத்தவும் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள மீன்பிடி முறைகளைக் கைக்கொளபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்து அவற்றைத் தடை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை முன் வைத்துள்ளார்கள்.

## காணாமற் போனோர் குறித்த

# விசேட ஆணைக்குழுவின் காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பு

(கொழும்பு))

காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவின் அடுத்த அமர்வுகள் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.


ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாச இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 28ஆம் திகதியும் மார்ச் மாதம் 1,2 மற்றும் 3ம் திகதிகளிலும் திருகோணமலையில் அமர்வுகள் நடைபெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ இந்த ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை பெப்பரவரி மாதம் 15ஆம் திகதி வரையில் நீடித்திருந்தார். அதன்படி இன்றுடன் பதவிக்காலம் முடிவதாக இருந்தது.

எனினும் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்த ஆணைக்குழுவின் தவணைக் காலத்தை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீடித்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஏ9 வீதியில் விபத்து நால்வர் படுகாயம்



கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு முன்பாக ஏ-9 வீதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற விபத்தில் நால்வர் படு காயமடைந்தனர்.

செஞ்சோலை சிறுவர் இல்லத்துக்கு சொந்தமான பிக் அப் ரக வாகனமே விபத்துக்குள்ளானது. வாகனத்தில் பயணித்தவர்கள் நால்வர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப்பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## குளவி கொட்டியதில்

# அதிபர் உட்பட மூவர் வைத்தியசாலையில்

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் குளவி கொட்டியதில் பாடசாலை அதிபர், உப அதிபர், மாணவி ஒருவர் என மூவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

குறித்த பாடசாலையில் நேற்று இல்ல மெய்வன்மைப் போட்டி நடைபெறவிருந்த நிலையில், காலை அதற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்த சமயம் பாடசாலைக் கட்டடத்திலிருந்த குளவிக்கூடு கலைந்து அங்கு நின்றவர்களைத் தாக்கியது.

இதனையடுத்து பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டி நேற்று நடைபெறாது என்றும், பிறிதொரு தினத்தில் போட்டி நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட

# 10 இராணுவ அதிகாரிகளை சேவையில் இணைக்க பணிப்பு

(கொழும்பு)

முன்னைய ஆட்சிக்காலத்தில் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட பத்துஇராணுவ அதிகாரிகளை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலுக்குப் பின்னர், சரத் பொன்சேகாவுக்கு ஆதரவான இராணுவ அதிகாரிகள் சிலரை முன்னைய அரசாங்கம் கட்டாய ஓய்வில் அனுப்பியது.

இவ்வாறு கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க உள்ளிட்ட 10 அதிகாரிகளை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளதாக, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார்.


மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, பிரிகேடியர்களான பிமல் டயஸ், துமிந்த கெப்பிட்டிவலன்ன, ஜனக மகோற்றி, அத்துல ஹன்னடிகே, வசந்த குமாரப்பெரும மற்றும் கேணல் உபய சிறிவர்த்தன, லெப்.கேணல் பி.ஜெயசுந்தர, கப்டன்களான ரணவீர, கிரிசாந்த ஆகிய பத்து அதிகாரிகளுமே மீண்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஆயுதப்படைகளின் தளபதிகள் என்ற வகையில், ஜனாதிபதி நேற்று முன்தினம் முதல் இவர்களை படையில் இணைத்துக் கொள்ளும் ஆவணங்களில் ஒப்பமிட்டுள்ளார்.

மீள இணைத்துக் கொள்ளப்படும் பத்து அதிகாரிகளும், நாளை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயாரத் நாயக்கவைச் சந்திக்கவுள்ளனர்.

# மனித உரிமைகள் நிலை இலங்கையில் முன்னேற்றம்

## சமந்தாபவர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா.விற்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவரை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நியுயோர்க்கில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. வெளிவிவகார அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசமும் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்புக் குறித்து டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர், மங்கள சமரவீரவுடனான சந்திப்பு ஊக்கமளிப்பதாகவும், ஜனவரி மாதம் நடந்த தேர்தலுக்குப் பின்னர் இலங்கையின் மனித உரிமைகள் நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் தெரிவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்த அமெரிக்க அதிகாரிகளில் சமந்தா பவர் முக்கியமானவர்.

அதிபர் ஒபாமாவுக்கு நெருக்கமானவரான இவர், இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மோ.சைக்கிளில் சென்றவரை மோதித்தள்ளியது பேருந்து

## சம்பவ இடத்தில் அவர் பலி




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை நோக்கி பயணித்த பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து முன்னே சென்ற மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

இந்த விபத்து கனகராயன் குளம், மன்னகுளம் பகுதியில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றது. விபத்தில் உயிரிழந் தவரது சடலம் வவுனியா வைதியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கனகராயன் குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.